# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி


ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 1 | ஞாயிறு 1-1-39 வெகுதான்யஹூ மார்கழிமீ 17உ | முத்து 14

## பொருள் அடக்கம்


| விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வாரம் குத்தகையா? | .... | 330 |
| 2. | குறிப்பு | ... | 331 |
| 3. | போகிற போக்கில் | ... | 333 |
| 4. | வாரச் செய்திகள் | ... | 336 |
| 5. | திண்ணையில் (ராவ்சாகேப் கே. சுப்ரமண்யம்) | .... | 337 |
| 6. | கிஸான் பகவன் (பாலம்) | ... | 342 |
| 7. | குதிரைப்பந்தயம் (ரஸிகன்) | ... | 345 |
| 8. | செல்லப் பெயர் (வஸந்தன்) | ... | 349 |
| 9. | குயவன் (ஸ்ரீ. கோத்தமங்கலம் சுப்ரமண்யன்) | ... | 351 |
| 10. | தாதா, பாட்டி கற்றுக்கொடுத்த பாடம் (டாக்டர் டி. எஸ். ரமணி) | ... | 353 |
| 11. | வாலிபர் சங்கம் (வே. சு. ரா.) | ... | 356 |
| 12. | வலை வீச்சு | ... | 358 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# வாரம் குத்தகையா ?

பிரகாசம் கமிட்டியின் முடிவுகளில் இரண்டாவதாக முக்கியத்துவம் வாய்ந்தது ஜமீன்தாரிக் குடிகள் செலுத்தும் வாரம் நிலவரியே யொழிய குத்தகையல்ல என்பது.

இப்பொழுது இருக்கும் அபிப்பிராயப்படியும் 1908-ம் வருஷ எஸ்டேட் நிலச் சட்டப்படியும் ஜமீன்தார் நிலச்சுவான்தார் என்றும் ஜமீன் குடிகள் கொடுக்கும் மேல் வாரம் குத்தகை என்றும் ஏற்படுகிறது.

1802-ம் வருஷம் செய்த ஏற்பாட்டின் படி குடியானவர்கள் கொடுக்க வேண்டியது குத்தகை என்று ஏற்பட்டதற்கு அடையாளமாக தஸ்தாவேஜுகளில் ஒன்றும் காணோம். ஜமீன்தார் வசூலித்த தொகையில் மூன்றில் இரண்டு பங்கைப் பேஷ்கஷ் தொகையாக சர்க்காருக்குச் செலுத்த வேண்டுமென்று தான் நிர்த்தாரணம் செய்யப்பட்டது. இதிலிருந்தே விஷயம் நன்றாக விளங்குகிறது. ஜமீன்தார் வசூலித்த தொகையில் மூன்றில் இரண்டு பங்கு சர்க்காருக்குப் போய் விட்டால் பாக்கியிருந்தது ஜமீன்தாருக்குச் சேர்ந்த குத்தகை? அது ஒரு நாளும் இருக்க முடியாது.

மொத்தத்தில் ஜமீன்தார்கள் சர்க்காருக்குச் செலுத்தும் பேஷ்கஷ் ரூ. 41·2 லட்சம்; ஆகையால் அவர்களுடைய நிகர வருமானம் 1802-ம் வருஷத்தில் 20·6 லட்சமாக இருந்திருக்க வேண்டும். இந்த மாதிரி நாம் ஏன் வாதம் செய்கிறோம் என்றால், வேறு விதமாக குடிகளின் பாத்தியதையை நிரூபிக்க தஸ்தாவேஜுகள் இல்லை. ஜமீன்தார்கள் நிலச் சுவான்கள் என்ற கட்சியே பிற்காலத்தில் வலுத்து சர்க்காரும் அதையே ஆதரித்து சட்டங்கள் இயற்றி விட்டதால் ஏழைமக்களின் பாத்தியதையை நிர்ணயிக்கும் ஆதாரமே அற்றுப்போய் விட்டது.

ஜமீன்தார் நிலச் சுவான்தாராக இருந்திருந்தால் 1802-ம் வருஷத்தில் அவர் வசூலித்த மேல்வாரத்தில் மூன்றில் இரண்டு பங்கை சர்க்காருக்குக் கட்டிவிட்டு ஒரு பங்கை மட்டும்தானா குத்தகையாக எடுத்துக் கொண்டார்? இந்த மேல்வாரத்தைத் தவிர வேறு தொகையையும் ஜமீன்தார் குடிகளிடம் வசூலித்ததாக ஆதாரமில்லை; வசூலிக்க அதிகாரமும் இல்லை. ஆகையால் மேல்வாரம் குத்தகையாக இருந்திருக்கவே முடியாது.

வாரம் என்ற வார்த்தையைக் கண்டு ஏமாந்துவிடக் கூடாது.

குடிவாரம் மேல்வாரம் என்ற வார்த்தைகள் மகசூலின் இரு பகுதிகளுக்கு ஏற்பட்ட பெயர்கள்தான்; மேல்வாரம் குடிகள் சர்க்காருக்குச் செலுத்தும் பணம்; அதில் பேஷ்கஷ் போக பாக்கியை கிஸ்தி வசூல் செய்து கொடுத்ததற்காக சர்க்காரிடமிருந்து ஜமீன்தார்கள் கமிஷனாகப் பெற்றார்கள், அவ்வளவு தான். குடிவாரம் குடியானவனின் பாகம்.

வாரம் குத்தகையல்ல. அது வெறும் 'பகுதி'த் தொகைதான். அந்த வாரத்தை வசூல் செய்ததால் ஜமீன்தார் நிலச்சுவான்தார் ஆகிவிட முடியாது. 1802-ம் வருஷத்திற்குப் பிறகு நிலைமை எப்படியோ குழம்பி 1908-ம் வருஷ ஸ்திதிக்கு வந்து விட்டது. இந்திய கிராமமக்கள் சீரழிவதற்கான சதி அந்த நூறு வருஷங்களுக்குள் எப்படியோ நடந்து நிலைபெற்று விட்டது.

அது அர்த்தமற்ற நிலை. தர்க்க வாதத்திற்கே முதலாவதாகப் பொருந்தாதது. அது நீங்கினால் நாடு நேர்மை நிலை அடையும்; குடிகள் தலையெடுப்பார்கள். அது மட்டுமல்ல; சர்க்காரும் இதுவரையிலும் அடைந்துவந்த நஷ்டத்தை இன்னும் அடைந்து கொண்டே இருக்கமாட்டார்கள். ஜமீன்தார்களுக்கு இவ்வளவு உரிமைகளை இவ்வளவு வருஷங்கள் கொடுத்திருந்தது குற்றம். இதற்கு யார் பொறுப்பாளி என்று எப்படிக் கூற முடியும்?

குறிப்பு

# காந்திஜி—கொரடா!

சேலத்தில் மதுவிலக்கு சட்டத்தால் ஏற்பட்ட பலன்களைப்பற்றி சென்னை சர்வகலா சாலை பொருளாதார ஆசிரியர் டாக்டர் தாமஸ் செய்துள்ள ஆராய்ச்சியிலிருந்து அந்த ஜில்லாவில் நிச்சயமாக சுபிட்சம் ஏற்பட்டு விட்டதென்று தெரிகிறது. மதுவிலக்கு வெற்றியைப்பற்றி ஜில்லா கலெக்டரும் சர்க்காரும் சப்பைக் கட்டு கட்டிக் கொண்டிருந்தார்கள் என்று எண்ணினவர்களெல்லாம் டாக்டர் தாமஸின் அறிக்கையிலிருந்தாவது நம்பிக்கை கொள்ளலாம். தேச மக்களுக்கு மதுவிலக்கு சட்டம் எப்பேர்ப்பட்ட கல்பக விருக்ஷமாக இருக்கிறதென்பது தெளிவாகும்.

மதுவிலக்கு விஷயத்தில் காங்கிரஸ் சர்க்கார்கள் தேவையான அளவு துரிதத்துடன் வேலை செய்யவில்லை என்று காந்திஜி மனம் புழுங்குகிறார். ராஜாஜிகூட இந்த விஷயத்தில் தைரியமாக முன்னேற வில்லையென்று வருத்தப்படுகிறார். வருமானம் குறையுமே என்று சர்க்கார்கள் தயங்கக் கூடாதென்றும் தேவையானால் அதிக வரிகள் போட்டாவது மூன்று வருஷங்களுக்குள் மதுவிலக்கைப் பூரணமாக மாகாணங்களில் ஏற்படுத்த வேண்டுமென்றும் வற்புறுத்தி எழுதுகிறார்.

பொதுவாகவே காந்திஜி காங்கிரஸ் மந்திரிகளின் வேலையை ஆழ்ந்து கவனித்து வருவதில், அவர்கள் போக்கு அவருக்கு அவ்வளவு திருப்தியை அளிக்கவில்லை என்பது அவர் அடிக்கடி 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதும் கட்டுரைகளிலிருந்து தெரிகிறது. அந்த மகத்தான பத்திரிகையில் வாராவாரம் நாட்டின் நிலைமையை அலசி காந்திஜி தன் விமர்சனத்தை எழுதுகிறார்.

போலீஸ், ராணுவ பலமின்றி காங்கிரஸ் மந்திரிகள் அரசாட்சி நடத்த வேண்டுமென்கிறார்; சாமர்த்தியமில்லை யென்றால் வெளியேறுவதுதான் முறை என்கிறார்; மந்திரிகள் ரொம்பவும் தஸ்தாவேஜி வெறிகொண்டு விடக்கூடாதென்றும், அதிகாரப் பித்து பிடித்துவிடக் கூடாதென்றும் எச்சரிக்கை செய்கிறார். நிர்வாகத்தில் (Red tapism) எனப்படும் தோரணையைப் பாராட்டாமல் நாட்டு மக்களின் ஹிதத்தையே சதாசர்வ காலம் லட்சியமாகக் கொண்டு வேலை செய்ய வேண்டும்; சில்லறையாக ஆபீஸ் வேலைத் திறமையில் மட்டும் கவனம் செலுத்தி பெரிய பிரச்னைகளை மழுப்பிவிடக் கூடாது என்று காந்திஜி இடைவிடாது காங்கிரஸ் சர்க்கார்களைத் தூண்டிக் கொண்டிருக்கிறார். நிர்வாகச் சேற்றில் அழுந்திப் போகாமல் மந்திரிகள் தலைதூக்கி காந்திஜியின் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்க வேண்டியது மிகவும் அவசியம்.

## ஸ்ரீ எஸ். சீனிவாச அய்யங்கார்

ஸ்ரீ எஸ். சீனிவாச அய்யங்கார் அரசியலுக்குத் திரும்பி வந்தால் நாம் அவரை மன மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்; ஏனென்றால் அவரைப் போன்ற பிடிவாதக் குணமும், அழுத்தமும் தைரியமும் தியாக புத்தியும் உள்ள தலைவர்கள் நம்மிடையே சிலர்தான் இருக்கிறார்கள். ஆகையால் அவர் அக்ஞாத வாசத்திலிருப்பது நாட்டிற்கு ஒரு நஷ்டம் தான்.

காந்திஜியுடன் போட்டிபோட முடியாததுதான் காங்கிரஸை விட்டுத் தான் விலகியதற்குக் காரணம் என்கிறார். ஸ்ரீ சீனிவாசய்யங்காரைப் போன்ற மேதை தான் பொது வாழ்விலிருந்து விலகியதற்கு இப்பேர்ப்பட்ட காரணத்தைக் கூறுவதைக் கண்டு நாம் ஆச்சரியப் படுகிறோம்.

நாட்டில் நெருக்கடி ஏதாவது ஏற்பட்டு, தான் வெளியே வரவேண்டியது அவசியம் என்று தோன்றினால் வருவதாகச் சொல்லுகிறார். நாட்டில் நெருக்கடி இனிமேலா ஏற்படப் போகிறது? என்று நெருக்கடி இல்லை? நெருக்கடி என்றால் அவர் எதை எண்ணிக் கொண்டிருக்கிறார்? நமது நிலையே ஒரு நீண்ட நெருக்கடியா யிருக்கும்போது எந்த சந்தர்ப்பத்தில் தியாகத்திற்கும், முயற்சிக்கும், உண்மைக்கும் தேவையில்லை?

## தொழில் அபிவிருத்தித் திட்டம்

பம்பாயில் கூடிய கமிட்டியால் நியமிக்கப்பட்ட தனிக்கமிட்டி தொழில் அபிவிருத்தி விஷயமாக பிரமுகர்களும் மாகாண சர்க்கார்களும் அபிப்பிராயம் கூறுவதற்காக கேள்வித் தொகுதி யொன்று தயாரித்து அதன் நோக்கத்தையும் விளக்கி யிருக்கிறது. பொருளாதார அபிவிருத்தி மேன்மேலும் சிறந்தும் துரிதமாகவும் நடைபெறுவதற்காக வேண்டி, பொருள் உற்பத்தி செய்கிறவர்கள் வாங்குகிற

வர்கள் இவர்களிடையே உரிமைகளை சமரஸப்படுத்தி சமூகமே ஒருருவமாக முன்னேற வேண்டியதற்காக ஒரு சரியான பொருள் விநியோக முறை ஏற்படவேண்டும். உதாரணமாக, வாழ்க்கை வசதிகள் இப்பொழு திருப்பதைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக இருக்க வேண்டுமென்பது கமிட்டியின் கொள்கை. பின்வரும் விஷயங்களைப் பற்றித் தகவல் கொடுக்கும்படியாக கேள்விகள் அமைந்திருக்கின்றன:—

(1) தேசியத் தொழில் அபிவிருத்திக்காக விவசாயம், சுரங்கங்கள் காடுகளிலிருந்து தொழில்களுக்கு உபயோகப்படக் கூடிய மூலப் பொருள்கள்.

(2) முதல், தொழில், மின்சார சக்தி, எரி பொருள் இந்த அம்சங்களில் கிடைக்கக்கூடிய வசதிகள்.

(3) வியாபாரம், போக்குவரத்து முதலிய சாதனங்களிலிருக்கும் சௌகரியா சௌகரியங்கள்.

(4) மூலாதாரமான பெரிய தொழில்கள் அபிவிருத்தி செய்வதற்கு இருக்கும் வசதிகள்.

(5) நியாயமற்ற போட்டியைத் தடுக்கவும் தேசியத் தொழில்களுக்கு ஆதாரவூட்டவும் தேவையான சட்ட நிர்மாணத் தேவைகள்.

(6) தேசீய திட்டத்தின் நோக்கங்களும் தேவைகளும்.

(7) விவசாயமும் கால் நடை அபிவிருத்தியும்.

(8) தொழிலாளருக்கு இருக்கும் வேலைத் திட்டமும் நிலைமையும்; வேலையில்லாமையைத் தீர்க்க வழிகள்.

(9) தொழில்களை சீராக நடத்தி நிர்வகிக்கும் அதிகார நியமனம்.

ஆறு வாரங்களுக்குள் இந்தக் கேள்விகளுக்குப் பதில்கள் கிடைத்து விடலாமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தத் தொகுதியின் நோக்கத்தையும் விஷயத்தையும் விளக்கி ஆசிரியர் கே. டி. ஷா பல சர்வகலாசாலைகளிலும் மாகாணத் தலைநகர்களும் பிரசங்கம்செய்யலாம்.

## படக்காட்சி சபை (ஆகாடெமி)

சென்ற வாரம் சென்னையில்கூடிய மூன்றுவது சென்னை மாகாண பிலிம் மகாநாட்டில் சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. படமெடுக்கும் சுருளின்மீது விதிக்கப்படும் இறக்குமதி வரியைக் குறைக்க வேண்டுமென்று சர்க்காரைக் கோரி ஸ்ரீராம பிரம்மத்தின் பிரேரணையின் பேரில் ஒரு தீர்மானம் நிறைவேறிற்று. வருஷா வருஷம் 25 லட்சம் ரூபாய் பெறுமான சுருள் இந்தியாவிற்கு வருகிறது. தேசீயத் தொழில் அபிவிருத்தி திட்டத்தில் படக்காட்சித் தொழிலுக்கும் சரியான முக்கியத்துவம் கொடுக்குமாறு வற்புறுத்த ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸை கண்டு பேசத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு படக்காட்சி அகாடெமியும் ஸ்தாபிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.


படம் பிடிக்கும் டைரக்டர்களும் நடிகர்களுமே இதில் முக்கியமாகப் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பட முதலாளிகளில் பெரும்பான்மையோர் வெறும் வியாபார நோக்கத்துடனேயே இன்னும் படங்கள் தயாரித்துக் கொண்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. டைரக்டர்களும் நடிகர்களுமாக முனைந்து நின்று படங்கள் முதல்தரமாக இருக்கும் நிலைமையை நிலைநாட்டுவார்கள் என்று நம்புகிறோம்.

## திருவாங்கூர் நெருக்கடி

கடைசியாக திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ், காந்திஜியின் யோசனைப்படி, திவானின் பேரில் ஏற்படுத்திய குற்றச் சாட்டுகளை வாபஸ் பெறுவது என்று தீர்மானித்து விட்டதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். காந்திஜியும் அதைக் கேட்டு அகமகிழ்ச்சி கொண்டதாக எழுதி சமஸ்தான காங்கிரஸ் சத்தியாக்கிரஹ எதிர்ப்பையும் தாத்காலிகமாக நிறுத்தி விட்டு நிலைமையை மறுபடியும் பரிசீலனை செய்தால் அமைதிக்கு நல்லது என்று யோசனை கூறுகிறார்.

மாஜிஸ்ட்ரேட் உத்தரவைமீறி கூட்டம் நடைபெற்ற பிறகு, திடீரென்று சமரஸத்திற்கு இந்த மாதிரி ஒரு வழி ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தைத் தவற விடாமல் திருவாங்கூர் சமஸ்தானமும் அடக்கு முறையை நிறுத்தினால் நல்லது. சமஸ்தான காங்கிரஸ் காந்திஜியின் யோசனையைப் பின் பற்றியது அதன் நோக்கத்திற்கும் இயக்கத்திற்கும் எதிர்காலத்தில் பலத்த ஆதாரவாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

# போகிற போக்கில்



இந்த வாரம் உலகம் முழுவதிலும் ஓய்வு. எல்லோருக்கும் விடுமுறை; தோட்டி முதல் தொண்டமான் வரையில் லீவு. கொண்டாட்டம், குதூகலம்; கும்மாளம் அடிக்கலாம்; எக்ஸிபிஷன் போகலாம்; சினிமாக் கொட்டகையில் ரஸமான காட்சியின் முன் சுருள் சுருளாய் ஆனந்தப் புகையை ஆகாயத்தில் ஏற்றி சுருட்டுப் பிடிக்கலாம். கண் கொள்ளாத காக்ஷிகளைக்கண்டு எல்லோரும் களிக்கலாம். பிறர் பணத்தில் தினசரி முழுகி ஆதாயம் செலவு செய்து வரும் பாங்கிகளுக்குக்கூட லீவு. பிறர் சுக துக்கத் தபால்களை தினசரி வாரி இரைக்கும் தபாலாபீசுக்கும்கூட லீவு. ஆனால் இருவருக்குத்தான் லீவு இல்லை. கடலில் அலை ஓயும்போதுதான் இவர்களுக்கு வேலை ஓய்வு. நண்பர்களே, யாரைக் குறிப்பிடுகிறேன் தெரியுமா? ஆசிரியர்களுக்கும், மந்திரிகளுக்கும் ஓய்வு ஏது? ஆசிரியர்களுக்கு தொடர்விடாமல் கட்டுரையும், கதையும் "காலிப்ரூபும்", மந்திரிகளுக்கு "பைலும்", ஊர்கோலமிட்டாப்போல் வந்துகொண்டே யிருக்கின்றன—கரையான் புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல்! ஆனால் மந்திரிகளை ஆசிரியர்களுக்கு உபமானத்தில்கூட பூராவும் ஒப்பிட எனக்குத் தைரியமில்லை. மந்திரிகளின் தினசரி வேலை—வருவோர் போவோரை கண்கொட்டாமல் பார்த்து, காது சலிக்காமல் கேட்டு, காபிகொடுத்து திருப்திசெய்து போகச்சொல்வது—முடிந்ததும் சாயங்காலம் 4 மணியானால் நிச்சயம் ஒரு டீபார்ட்டியாவது உண்டே, ரோஜாப்பூமாலை கிடைத்தாலும் கிடைக்குமே—கோவில்களில் சுவாமிக்கு அலங்காரம்செய்ய இப்பொழுது புஷ்பம் ஏது! இம்மாதிரியான நயசுகங்கள் உழைக்கும் ஆசிரியருக்கு ஏது? நான் சொன்னபடியே இவ்விருவர்களுக்குத்தான் இந்தவாரம் ஒழிவில்லை.

ஏசுநாதர் பிறந்தவாரத்தில் ஆசிரியர்களுக்கு 'காலி புரூப்' பார்த்தாகவேணும் மந்திரிகளுக்கு ராஜபாளையம் போய் மாகாண மகாநாட்டை நடத்தியாக வேணும். தங்களுக்கு நாயகரான ஜன நாயகத்தைச் சண்டை சச்சரவன்னியில் நடத்தி வைக்கவேணும். கவலைதான். வரும்காலம் சிரமகாலமாய் காண்கிறது. தவிர ராஷ்டிரபதியான சுபாஷ் போஸூம் வருகிறார். மிக்க சிரமம்தான். ராஜபாளையம் மகாநாட்டில் என்னென்ன காரியங்கள் தமிழ்நாட்டிற்காக அவசியம் செய்யவேண்டியதென்று குறிப்பிட்டு இந்தவாரம் எழுதலாமென்று எண்ணினேன்.

ஆனால் அசட்டுத்தனமாய் சென்ற வாரத்தில் மற்றொரு விஷயத்தைப்பற்றி இந்த வாரம் எழுதுவதாக வாக்களித்திருக்கிறேன். அதை இந்த சமயத்திலாவது காப்பாற்றவேண்டாமா?

* * *

"டில்லியில் சென்னை ராஜதானியென்றால் ஒரே அலக்ஷியம்"—என்று சென்ற வாரம் எழுதினேன். நமது ராஜாஜியும் சத்யமூர்த்தியும், முத்துரங்க முதலியாரவர்களும் தமிழ்நாட்டுத் தலைவர்களாக இருந்தும் கூடவா? இதற்குக் காரணமென்னவென்று தெளிவாய் பார்த்தெடுத்து உரைப்பது சிரமம். "ஸைகாலஜி" என்கிற விஞ்ஞானத்தில் புகுந்து நுட்பமாய் வேலைசெய்தால்தான், இந்த விஷயத்தில் கொஞ்சம் ஒளி கிடைக்கும். அதற்கு இது சமயமல்ல. பக்கங்கள் போதாது.

கொஞ்சகாலத்திற்குமுன் நான் பம்பாய்க்குப் போயிருந்த சமயத்தில் ஒரு பெரிய இந்திய அதிகாரியிடம் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அவர் மகா புத்திமான். பரமசாந்தன், எல்லா விஷயங்களையும் அறிந்தவர். கன்னியா குமாரி முதல் ஹிமோத் பர்வதம் வரையில் நான் பலதடவை சுற்றுப் பிரயாணம் செய்து பல தலைவர்களைக் கண்டு களித்துப் பேசியிருக்கிறேன். இவரைப்போலொத்த கூர்மையுள்ள புத்திமானையும், உலகவிஷயம் நன்கறிந்தவரையும், அரசியல் திட்டத்தில் தெளிவான நோக்கமுடையவரையும் நான் பார்த்ததில்லை. ராமனுக்கு விக்ஞானத்தில் 'நோபல் பிரைஸ்' கொடுக்கப்பட்டதுபோல் இவருக்கு எந்த விஷயத்திலும் தெளிவான ஞானத்திற்கு ஒரு 'நோபல் பிரைஸ்' கொடுக்கலாம். இதுதான் சரியான சமயமென்று நினைத்து என் சந்தேகங்களில் சிலவற்றை அவரிடம் தெரிவித்துக்கொண்டேன். ஏன், ஐயா, நமது தமிழ்நாட்டை மாத்திரம் முக்கியமான காரியா காரியங்களில் ஒன்றிற்கும் டில்லியில் மதிக்கமாட்டேன் என்கிறார்களே; ஏன்? எதை வேண்டுமானாலும் எடுத்து பாருங்கள். ரயிலையேபாருங்கள். ரயிலோ மீடர் கேஜ், எஞ்சினோ துக்கடா. வண்டியோ கடகட. நாகுக்கு, நாகரீகம் பொருந்திய நமக்கு இந்த துக்கடா வண்டியா? நாம் வரி செலுத்தவில்லையா? கோதுமை என்றால் வேண்டிய சாதகம் வட இந்தியாவில் செய்து கொடுக்கிறார்கள். நெல்லென்றால் கேள்வி முறையில்லை. இண்டோ-சைனாவிலும் பர்மாவிலும், தசு கூலி செலவன்னியில் காட்டு விளைச்சலாய் விளையும் தடி நெல்லுக்கு, ஹார்த்தி வெற்றிலைப்பாக்கு வைத்து அழைத்து சகல வசதிகளும் கொடுத்து, நாகப்பட்டிணம் துறைமுகத்திலும், சென்னையிலும் அழைக்கிறார்களே? கேட்டால் ப்ரீ டிரேட் என்கிறார்கள். இதனால் தேசத்திற்கு எவ்வளவு கஷ்டநஷ்டங்கள் ஏற்படுகின்றன? இதை மத்திய சர்க்கார் கேட்கமாட்டார்களா?

அதற்கு அவர் புன்சிரிப்புடன் பதில் சொன்னார். "சென்னை சமாச்சாரங்களும் கஷ்டநிஷ்டூரங்களும் டில்லி சர்க்கார் காதில் எட்டுகிறதில்லை. எட்டினாலும் சரியாக விழுகிறதில்லை. அப்படி விழுந்தாலும் அவர்கள் மனதில் படுகிறதில்லை. ஹைகோர்ட்டில் நீ ஸர் அல்லாடி மாதிரி திறமையாய்ப் பேசினாலும் உன் சட்டத்தையும் வார்த்தையையும் ஜட்ஜ்கள் எடுக்கிறார்களா? அப்படித்தான் சென்னைத் தலைவர்கள் வார்த்தைகளுக்கு டில்லியிலும் வட இந்தியாவிலும் மதிப்பு. இந்த மதிப்பை நீ சம்பாதித்து கொள்கிற வரையில் உன் வார்த்தை செல்லாது. ஏழை வார்த்தைதான். அம்பலம்தான்— எவ்வளவு நியாயம் உன்பக்கத்திலிருந்தாலும்! விஷயம் பூராவும் புரிந்துகொண்டவன்போல் தலையை ஆட்டினேன்— அவரெடுத்துக்காட்டிய உபமானம் என் தொழில் முறைமைக்குக் கொஞ்சம் கௌரவக் குறைவாயிருந்தாலும்.

அவர் மீண்டும் சொன்னார். "நீ சொல்வதெல்லாம் சரி. இதை டெல்லி சர்க்கார் கேட்கும்படி ஓங்கி அடித்து பயப்படாமல் சொல்லக்கூடிய மாகாணத் தலைவர்கள் முன்வரவேணும். ஓங்கி அடிக்கிறவனுக்குதான் இப்பொழுது எங்கும் காலம். கோதாவரிக்குத் தெற்கே 'டைப்' அடிக்கும் குமாஸ்தாக்கள் தான் உற்பத்தியாகிறார்களென்றும் அவர்களுக்கு ரங்கூன் காட்டு அரிசி போதுமென்றும் நினைக்கிறார்கள். உன்னையும், என்னையும் போல் விஷயம் தெரிந்த பெரியோர்கள் உண்டென அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. நாம் டில்லிக்கு அனுப்புவோரெல்லாம் மண் பொம்மை என்று நினைக்கிறார்கள். அதை மாற்றவேண்டும். நமது மாகாணத்திற்கு உடனே க்ஷேமம்."

இந்த பம்பாய் சம்பாஷணை அடிக்கடி எனக்கு ஞாபகம் வருகிறது உண்டு. மத்திய சர்க்கார் அரசாங்க விஷயங்களில் சென்னையின் க்ஷேமலாபங்கள் பூராதிட்டம் வற்புறுத்தப்படுகிறதில்லை. வற்புறுத்தினாலும் அவர்களும் காது கொடுத்துக் கேட்கிறதில்லை.


* * *

இந்த உண்மை அரந்தாங்கி, காரைக்குடி ரயில் போடவேண்டிய விஷயத்தில் தெளிவாய்த் தெரிகிறது. 30 வருஷத்திற்கு முந்தியே இந்த ரயில், நமது பழக்க வழக்கங்களையும், ஜனங்களின் கொள்கைகளையும் அனுசரித்திருந்தால்,

போட்டிருக்க வேண்டியதவசியம். ராமேசு வரம் போகவேண்டியபுராதனமான புண்ய வழி, நியாயமானவழி இந்தமார்க்கம்தான். ஆவுடையார் கோயில் போய்தான் ராமேசு வரம் போகவேண்டும். அப்பொழுதுதான் சேதுஸ்னன புண்ணியம். திரும்பு காலில் மதுரை மீனுக்ஷியம்மன் தரிசனம் செய்யவேண்டும். இதுதான் சரியான பிரதக்ஷிணம். ஆனல் நமது ரயிலின் நோக்கம் ஜனங்களின் தினசரி சௌகரி யத்தை உத்தேசித்தும் புராதன கொள் கைகளை அநுசரித்தும் இதுவரையில் போடப்படவில்லையே. இரும்பையும், நிலக்கரியையும் உட்கொண்டுபோக வழி யையும், தான்யத்தையும் பருத்தியையும் எண்ணெய் விதைகளையும் வெளிக்கொண்டு போகச் சுலபமான குறுக்குவழியையும் அனுசரித்தல்லவோ இதுவரையில் ரயில் போட்டுக்கொண்டு வருகிறுர்கள். தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்குச் சரியான ரயில் திட்டங்களும் துறைமுகங்களும் தேவையென்று நான் சொல்ல வேண்டிய தில்லை. அடுத்த சமயத்தில் தமிழ்நாட்டுத் துறைமுக ரயில் திட்டங்களைப்பற்றி எழுதலாமென்று நினைக்கிறேன். வாய்க் கால்களை மராமத்துச் செய்து சீராக வைத் திருந்தால்தானே, காவேரியில் வெள்ளம் வரும்பொழுது நமது வயல்களுக்கு நீர் புரண்டு வரும்?

மணி.

---




டிக்கட் பரிசோதகர் :— "ஏன் ஸார் இந்தப் பையனுக்கு டிக்கட் வாங்கவில்லை? பையன் நன்ருகப் பேசுகிருனே. வயது ஆகவில்லை என்கிறீரே?

பிரயாணி :— நான் சொல்ரது உண்மை தான். அவன் 'பேசருன்' என்பதற்காக டிக்கட் வாங்கச் சொல்ரேளா என்னே? அப்ப ஒரு காரியம் பண்ரேன். அடுத்த தடவை ரயில்லே பிரயாணம் செய்யர போது, எங்க ஊர்லே ஒரு ஊமை இருக் கான். அவனே அழச்சிண்டுவரேன். அவன் தான் பேசவில்லியே. இனுமா விட்டுடரேளா?

# வாரச் செய்திகள்

இந்த வாரத்தில் யுத்த ஜுரம் ஐரோப்பாவில் இன்னும் ஒரு டிகிரி கூடவே உயர்ந்திருக்கிறது. சென்ற வாரத்தில் அமெரிக்க உள்நாட்டு மந்திரி ஸ்ரீ. ஐக்ஸ் ஹிட்லரைப் பற்றியும் சர்வாதிகார நாடுகளையும் தாக்கிப் பேசியதை ஜெர்மனி இலகுவில் விட்டுவிடவில்லை. அந்தப்பேச்சை வாபீஸ் வாங்கிக் கொள்ளும்படி ஜெர்மனி அமெரிக்காவைக் கேட்க, அமெரிக்கா முடியாதென்று பதில் சொல்லி விட்டது. ஜெர்மன் பத்திரிகைகள் அமெரிக்காவையும் அமெரிக்க ராஜதந்திரிகளையும் தாக்கும்வரை அமெரிக்காவும் தாக்கிக் கொண்டுதானிருக்கும் என்று பதில் கொடுக்கப்பட்டது. உடனே, ஜெர்மன் பத்திரிகைகள் ஸ்ரீ. ஐக்ஸ்மீது சீறி விழ ஆரம்பித்து விட்டன. ஆனால் கிறிஸ்துமஸ் கழித்துத்தான் ஜெர்மனி இதுபற்றி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமாம்.

21 அமெரிக்க நாடுகள் லிமாவில் ஒன்று கூடி ஒற்றுமைத் தீர்மானத்தை நிறைவேற்றின.

ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் வெகு நாளாய் உள்ள பகைமை இப்போது கொஞ்சங் கொஞ்சமாக வெளியே தலையைக் காண்பிக்கிறது. ஜப்பான் விஷயத்தில் ஸோவியத் ரொம்பத் தலையிடுவதாக ஜப்பானிய ராஜதந்திரிகள் கண்டிக்கிறார்கள். ஷிகாலியன் என்ற பிரதேசத்தில் மீன் பிடிக்கும் உரிமை சம்பந்தமாக ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் சச்சரவு ஏற்பட்டிருக்கிறது.

இதாலியும் பிரான்ஸும்தான் சண்டை போடத் தொடங்கியிருக்கும் மூன்றாவது ஜோடி. டியூனிஸ் சம்பந்தமான ஆர்ப்பாட்டங்கள் கொஞ்சம் அடங்கி யிருக்கும் சமயத்தில் இத்தாலி சர்க்கார் முன்வந்து டியூனிஸ் சம்பந்தமாகச் செய்யப்பட்ட 1935 வருஷ ஒப்பந்தத்தை கிழித்து எறிந்து விட்டார்கள். காரணம் அந்த ஒப்பந்தம் தற்கால சந்தர்ப்பங்களை ஒட்டி அமைய வில்லையாம்!

இந்தக் குழப்பங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டு இங்கிலாந்து பேசாமல் இருக்கிறது. மிகவும் குறிப்பிடத் தக்க விஷயமாக இங்கிலாந்தில் நடந்தது என்னவென்றால், ஆதோல் சீமாட்டியின் தேர்தல் தோல்விதான். சென்ற பதினைந்து வருஷங்களாக பார்லிமெண்டு மெம்பராக இருந்து சமீபத்தில் சேம்பர்லேனின் அயல்நாட்டுக் கொள்கையைக் கண்டிப்பதற்கு ராஜீனாமா செய்து மறுதேர்தலுக்கு நின்றார். அவருடைய தோல்வியால் அந்தத் தொகுதியிலுள்ள பெரும்பாலான ஜனங்கள் சேம்பர்லேன் கொள்கையை ஆதரிக்கிறார்கள் என்று தான் தெரிகிறது. இத்தகைய மனப்பான்மையைக் கண்டு ஜெர்மனிக்குச் சந்தோஷம்தான் என்பதில் சந்தேகமில்லை.

பர்மாவில் குழப்பங்கள் நிகழ்ந்திருக்கின்றன. கவர்னரின் விசேஷச் சட்டங்களை உபயோகிக்கும்படிகூட ஏற்பட்டு விட்டது. 'பர்மா பர்மியருக்கே' போன்ற சங்கங்களுக்கு சண்டையிலும் ரத்தக் களறியிலும் ரொம்ப ஆசை போலிருக்கிறது.

இந்தியாவில் பல முக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் திவான் பேரில் செய்த குற்றச்சாட்டுகளை வாபீஸ் பெற்றுக் கொண்டு விட்டது. இது திருவாங்கூரின் அரசியல் அமைதிக்கும், முன்னேற்றத்திற்கு சுபசகுனமாயிருக்கு மல்லவா?

அடுத்தாற்போல் ராஜ்கோட்டிலும் ஒரு சமரஸ ஏற்பாடு ஏற்பட்டு விட்டதைக் காண்கிறோம். சமஸ்தான மன்னர் பொறுப்பாட்சி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு அதற்காக ஒரு கமிட்டியையும் நியமித்து விட்டதாக அறிகிறோம். எல்லா அடக்குமுறைச் சட்டங்களையும் வாபஸ் வாங்கிக் கொண்டு அரசியல் கைதிகள் எல்லோருக்கும் விடுதலை அளிக்கப் போவதை அறிந்து சந்தோஷ மடைகிறோம். இந்த வெற்றி மற்ற சமஸ்தானப் பிரஜைகளுக்கும் கூடிய சீக்கிரம் வெற்றியை உண்டாக்கும் என்று தோன்றுகிறது.

இதே வாரத்தில் கோலாப்பூரில் கூட அரசியல் முன்னேற்றம் உண்டாகி யிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படி அகில இந்தியா ராஜீய முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கும்போது ஸ்ரீ ஜின்னாவும் அவரது தோழர்களும் பிற்போக்காகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு காங்கிரஸ் செய்த காரியங்கள் பிடிக்கவில்லையாம். காங்கிரஸ் மாகாணங்களில் முஸ்லீம்கள் கஷ்டப் படுத்தப்படுகிறார்களாம். இதே ரீதியில் அவர்கள் அழகாகப் பேசுகிறார்கள்.

சென்னையில் கிறிஸ்துமஸ் வேடிக்கைகளும் இன்னும் ஆடல் பாடல் மஹோத்சவங்களும் அமளி துமளிப்படுகின்றன. சங்கீத சபைகள், சாஸ்திர மகாநாடுகள், காங்கிரஸ்கள், எல்லாம் நடந்து முடிவு பெறுகின்றன.

# திண்ணையில்

(ராவ் சாகேப். கே. சுப்ரமணியம்)

"தாத்தா, கேட்டியளா ஸமாசாரத்தை?"

"என்ன விசேஷம்?"

"நம்ம ஜில்லாவுக்கும் ஸர்க்கார் சில ஆயிர ரூபாய்கள் கிராம அபிவிருத்திக்கென்று ஸாங்கிஷன் செய்திருக்கிறதாம். அதெல்லாம் நல்லதுதானே?"

"ஆமாடா ஆமா: ஆனால் சரியா, உருப்படியா, செலவழிச்சா நல்லதுதான்."

"என்ன தாத்தா ஸந்தேகம்? உங்களுக்குத்தான் எல்லா ஸந்தேகங்களும் கிளம்புமே. அதுகள் கூட அநேகமா ஸரியாத்தான் போகிறது" என்று பேபர் படிக்கும் சில பையன்கள் எங்கள் ஊர் கணபதி தாத்தாவிடம் ஆரம்பித்தார்கள். இவருக்குக் கோணக் கணபதி அய்யர் என்றும் கிறுக்குக் கணபதி என்றும் வாடிக்கைப் பெயர். இவர் எந்த விஷயத்திலும் குறுக்கு ஒன்று போடுவார்.

"என்னத்துக்காக இத்தனை ஆயிரங்களாம்? என்ன என்ன செய்யப் போகிறார்களாம்?" என்று கணபதி அய்யர் கேட்டார்.

"கிராம அபிவிருத்திக்கென்று" என்றான் விசுவம்.

"அப்படின்னு?"

"கிராமத்திலே கிணறு வெட்டறது. ரோட் போடறது. கக்கூஸ்கள் கட்டறது. மருத்துவச்சி ஒருவளைப் போடறது. டாக்டர் கூடப் போடலாமாம். சுகாதாரத்தைப் பற்றி லெக்சர் பண்றது. ஊரெல்லாம் சுத்தமாய் வச்சுக்கச் சொல்றது. இந்த மாதிரி யெல்லாம்."

"சரி, சரி. ரொம்ப நல்லதுதான். ஆனால் இந்த 10 ஆயிரமோ 12 ஆயிரமோ, நம்ப ஊருக்கா? அல்லது ஜில்லாவிலே யிருக்கிற எல்லா ஊருக்குமா?"

"ஏதோ சில ஊர்கள் இந்த வருஷம் எடுத்துக்கொள்றது. அடுத்த வருஷம் இன்னம் சில ஊர்கள். இப்படியே எல்லா ஊரையும் சரிப்படுத்திவிடுகிறது இன்னம் சில வருஷங்களில்."

"சரி. இதற்கெல்லாம் பணம் எங்கே யிருந்து வருகிறது? சர்க்காருக்கு நாம் கொடுக்கிறத்திலே யிருந்துதானே? உத்தியோகஸ்தர்கள் செலவு போகத்தானே? என்ன மிஞ்சப் போகிறது? சும்மா பூச்சு வேலைதான். கதைதான்—சர்க்கார் காகிதத்தில் தடபுடலாயிருக்கும். நியூஸ் பேபர்லே போட்டுடுவாள்—Health week சுகாதாரவாரம் கொண்டாடப்படும்—ஊர் கோலம்—பசங்கள் விளையாட்டு, இத்தோடேதானே—அசல் சந்தேகம்தான். இருக்கட்டும். நான் சொல்றேன். இப்ப என்ன அவசரம் கிணறு வெட்டறத்துக்கு? ஊருன்னா ஜலமில்லாமல் இருக்குமா? கிணறு, குளம், ஆறு, ஊத்து என்று இருக்காதா? இத்தனை யுகமா அந்த ஜனங்கள் தண்ணியில்லாமலே யிருந்தார்களா? இல்லை, ஊரிலே ஜனங்கள் ஜாஸ்தி விருத்தி ஆய்விட்டதா? ஊர்களிலேதான் மனுஷாள் எண்ணிக்கை ரொம்ப குறைஞ்சு போச்சே. தெருவிலே நாய் நரி ஊளையிடறதே. இன்னம் என்ன கிணறுகள்?

"ஆனால் ஆதிதிராவிடர் ஹரிஜனங்கள் சேரிகளிலே வேணும்னா வெட்ட வேண்டியதுதான். ஆனால் அந்தக் கிணற்றை கண்ட்ருக்டுகளுக்கு விடாமல், அவர்களையே வெட்டச் சொன்னால் என்ன? கண்ட்ருக்டுக்காரன் 10 கஜமோ, 12 கஜமோ வெட்டினேனென்று பேர்பண்ணிவிட்டு, ஜலம் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, பணத்தை வாங்கிக்கொண்டு போயிடறான். அவனுக்குக் கொடுக்கிற பாதிப் பணத்திலேயே ஜலம் நன்றாக வருகிற வரைக்கும் சேரியிலேயுள்ள ஜனங்களையே வேலை செய்விக்கட்டுமே. அதைச் செய்கிறதில்லேடா! சர்க்காரிலே சொன்ன ஆழம் கண்ட்ருக்டுக்காரன் வெட்டிப்புட்டு 'ஆழம்பாத்துக்கோ' என்கிறான். முழுப்

பணத்தையும் வாங்கிக்கொண்டு போயிடரான். ஜலம் வந்தாலும் வராதபோனுலும் அவனுக்குப் பாதகமில்லே. சேரிக்காரர்களேயே ஏற்பாடு செய்தால் பணமும் அந்த ஏழைகளேயே சேரும். செலவும் குறைச்சல். அவர்கள் தாங்களே தங்கள் நன்மைக்காகவே உழைக்கிருர்கள். ஆகையால் வேலே சுத்தம், பூரணமுடிவுக்கும் வரும். அப்படிக்கில்லாமல், தான் உழைக்காமல் வந்த சொத்துக்கு பொறுப்பும் குறைவுதான் சேரி ஜனங்களுக்கு. அநேகம் சேரி கிணறுகளிலே கொஞ்சம்தான் ஜலம். அதிலே தென்னேமட்டை, உரிமட்டை நாரு ஊரப்போட் டிருக்கான்கள். 'ஏண்டா அப்பா இதிலே தண்ணீர் எடுக்கிறதில்லியா'ன்னு 'தாம்புக்கயிறு இல்லிங்க; இருந்தாலும் மண் தோண்டியைப் போட்டா அடிபட்டு உடைஞ்சு போகுதுங்க. ஜலமும் கொஞ்சம். கயிறும் வாளி (bucket)யும் சர்க்காரிலே போட்டுப்டாங்களானுல் நல்லாயிருக்கும்!' என்கிருர்கள். கிணற்றுப் பொறுப்பு எப்படியிருக்கு பார்த்தியா? சர்க்காரிலே கிணறு வெட்டினுர்கள். வாளியும் கயிறும் ஏன் போடப்படாது? எல்லாம் ஸர்க்காரே செய்வார்கள் என்ற எண்ணமே தவிர தாங்களே தங்கள் மேன்மைக்கே உழைக்கவேண்டுமென்பதில்லே. இன்னும் ஒன்று சொல்கிறேன் கேள். ஏண்டா? (Scouts, cubs) சாரணர்கள், குட்டிகள் என்று காக்கி சட்டை, பூட்ஸுமாக, தலேப்பா கட்டிக்கொண்டு, வேலூர் தடியையும் நூல் கயிற்றையும் எடுத்துக்கொண்டு ஊர்கோலம் போகிறதுகளே பசங்கள். என்னத்துக்கடா?"

"அதா. 'Scout Troupe Rover' சாரணர்படை ரோவர்கள் என்று மேற்கு சீமையிலே கதையாம். அந்த மாதிரி இங்கேயும் எல்லாருக்கும் நன்மை செய்யணுமாம். எப்போதும் பொது நன்மைக்கு உழைக்கணுமாம். தினம் ஒரு உபகாரமாவது செய்யணுமாம். யாதொரு பிரதிபலமும் பெறக்கூடாதாம். என்றெல்லாம் அவாள் சட்டங்கள்."

"அப்படின்னு ரொம்ப நல்லதுதானே! ஏன், அவர்களேக்கொண்டே இந்த கிணறுகள் வெட்டித்தரச் சொல்லலாமே! பெரிய தருமமாச்சே! சர்க்காரிலே இதுக்கு பணம் கொடுக்கிருளானே? இந்த மாதிரி செய்யச் சொல்லட்டுமே."

"நல்லதுதான் தாத்தா நீங்க சொன்னது. ஆனுல் சொக்காய், பூட்ஸ், பெல்ட் எல்லாம் போட்டுக்கொண்டு, காம்ப்போய் கூட்டாஞ் சோறு தின்னுப்பிட்டு, கொஞ்சம் ஆட்டம் ஆடிவிட்டு வருகிறதுன்னு முக்கியமாய்? அவா வாத்தியார்களும் அந்தப் பசங்களும், பெரிய மனிதர் பையன்கள். படிச்சுப்பிட்டு பெரிய பெரிய உத்தியோகம் பண்ணப் போகிறதாத்தானே உத்தேசம். இதெல்லாம் செய்வாளா?"

"ஏண்டா செய்யமாட்டா? இப்போதான் பள்ளிக்கூடமெல்லாம் என்னமோ வர்தா (Wardha) திட்டம், உபயோகமுள்ள வேலே செய்யக் கற்றுக்கொடுக்கணும், உழணும், தோட்டம் செய்யணும், மாடு கறக்கணும், கைத்தொழில் செய்யணும், இன்னு சொல்லிக்கொண் டிருக்காளே! அதிலே இந்த மாதிரி கிணறு வெட்டப்படாதா? அந்தப் பட்டியிலே இந்த item சொல்லலியோ? இந்த மாதிரி சீமைகளில் இல்லியா?"

"அங்கே யெல்லாம் வேண்டிய மட்டும் பையன்களுக்கு தொழில் கற்றுக்கொடுக்கிருர்கள். அவர்களும் செய்கிருர்கள். அங்கெல்லாம் சிறு பையன்கள்கூட விளேயாட்டு ஏரோப்ளேன்கள் கூடச் செய்கிருர்கள். அவைகள்கூட பெரியதுபோலவே பறக்கிறதுகள்; சின்னச் சின்ன மோட்டார்கள், இயந்திரங்கள், படகுகள் துப்பாக்கி சுடறதுகள்; தச்சுவேலே கொல்லுவேலே, தோட்டம், இன்னம் என்னெல்லாமோ செய்யக் கற்றுக் கொடுக்கிருர்கள். செய்யவும் செய்கிருர்கள். இங்கேயோ வாத்தியார்களுக்கே ஒன்றும் தெரியாது. பையன்கள் அதுக்குமேலே. ஆனுல் அவாள் ஆட்டம், ஊளேயிடல், கத்தல், மட்டும் கண்டு கொண்டார்கள். இப்போ மந்திரி கிந்திரி வந்தால் ரோட் வரிசை நிற்கிறதைக் காணும் முன் மாதிரி. இவாளா நீங்க சொல்ற கிணறு வெட்டறது? நீங்க என்னமோ சொல்றியள் நடக்கணுமே"

"நடக்காமெ என்னடா? சர்க்காரிலே கட்டாய உத்திரவு போட்டா அவாள்

இவாள் எல்லாரும் சேர்ந்து நடத்திப்பிடுவாள்."

"அதற்கு அநேக அக்ஷேபகர்கள், பொதுக்கூட்டம், கண்டனத் தீர்மானங்களுக்குக் குறைவு இருக்காதே!"

"எதுக்குத்தான் இருக்காது. எல்லாத்துக்கும் இருக்கும். அதெல்லாம் சர்க்காரிலே கவனிக்கப்படாது. ஒரே அடியாய் உத்திரவு போட்டுவிடணும். ஆகிறதா இல்லையா பாரு. ஊரெல்லாம் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தால் முடியுமா? கட்சியும் பிரதி கட்சியுமாத்தானிருக்கும் வேலையே நடக்காது. அடே உனக்குத்தான் தெரியுமே. கோவாபரேடிவ் பாங்கி சமாசாரம். அது எதாவது உருப்படியா நடக்கிறதா? ஒரு வேலைக்கு 50 பேர் யோசனைன்னு அது ஆனுப்பிலேதான். ஒரு ஆள் சரியானவனு யிருக்கணும், நடத்தணும் இப்போதான் பாரேன். மேலச் சீமையிலே ஹிட்லர், முஸோலினி, கெமால்பாஷா, முதலான டிக்டேட்டர்கள் ஒரு அடியாய் அடிச்சுக் கொண்டுபோகிறார்கள். அந்த மாதிரி இல்லாத தேசங்கள் பெரிசு பெரிசா எப்படி யிருக்கு பாரேன். நீதான் பேபர்கள் படிச்சுக்கிண்டிருக்கியே. ஏண்டா, யுத்தத்திலே சேனாதிபதி ஒருவன் பேச்சிலே நடக்கணுமா சிப்பாய்கள், இல்லே, சிப்பாய்கள் யோசனைகளைக் கேட்டுக்கொண்டு அவன் உட்கார்ந்திருக்கணுமா? நடக்கணும்னு நடந்தாகணும்டா, தெரியுமா?"

"தாத்தா நீங்க சொல்றதை ஒப்புக்கொள்ளணும்போலே தானிருக்கு - அப்படி எங்கே நடக்கப்போறது?"

"எல்லாம் நடக்கும்டா நடக்கும். காலம் வரணும். நமக்கும் புத்திவரணும்."

"ரஸ்தா போடறதைப் பற்றி நீங்க ஒண்ணும் சொல்லலியே."

"வேண்டியது தான், ரஸ்தாக்கள் சாலைகள் எல்லாம். ஆனால் முக்கியமாய் வரப்போக இருக்கும் உத்தியோகஸ்தர்கள் மோட்டார்கார்களுக்கும் வில் வண்டிகளுக்கும் தானே ரொம்ப முக்கியம்? நாமெல்லாம் அநேகமாய் வயல் வெளிகளுக்குப்போகிறதுன்னு நமக்கும் நம் மாடுகளுக்கும் கப்பிரோட் எதற்காக? நமக்கு விளையற நெல்லோ தானியமோ கொஞ்ச நஞ்சம் வெளியிலே போகிறதாயிருந்தால் நம்ப கட்டை வண்டி மாடுகள் கப்பிரோட் கேட்கிறதில்லே. நாமும் அதுகளும் உழைக்கிறதெல்லாம் வருஷம் முழுவதும் சேத்திலும் கட்டியிலும் முட்டியிலும் தான் - என்னிக்கோ ஆடிக்கோ அமாவாசைக்கோ ரோட்டுக்குப் போகப் போறது - அப்படித்தான் போடறாளே, அதிலே எதாவது பணலாபம்? நமக்கில்லே. கண்ட்ராக்டர்களுக்குத் தான். ஒட்டிக்கு இரண்டு மூன்று பங்கு செலவு - அடுத்த மழையிலே அது கரைஞ்சு வாய்க்கால் வாய்க்காலா அறுத்துக் கொண்டு போயிட்டா கவனிக்கிறவா யாரு? முதலிலே ரோட்டு போட்டுவிடலாம்; அதை சரியா நல்ல ஸ்திதியிலே வைத்துக்கொள்ளணுமே, அது நடக்கிறதா பார்த்தியா? ஏதோ பணம் ஸாங்ஷன் ஆச்சு. அதை அந்த வருஷத்திலே சிலவு பண்ணிவிடணும்-அவ்வளவு தானேடா? சர்க்காரிலே எந்த ஊரிலாவது அந்த ஊர்க்காரருக்கு பொதுவாகத் தெரிஞ்சு போடறாளோ? ஏதோ ஹெட்குவார்ட்டரிலே கண்ட்ருக்டருக்கும் உத்தியோகஸ்தர்களுக்குள்ளும் நடக்கிற விஷயங்கள். அதிருஷ்டம் பிடிச்சுது ஒரு ஊருக்கு. கிணறு வெட்டற மாதிரி இதையும் ஊர்க்காரர்களே செய்து கொள்ளட்டும் என்று உத்திரவு ஆயிடணும். மேலச்சீமைகளிலே ஸர்வாதிகாரிகள் மாதிரி, ஊரிலேயும் ஒரு நாட்டாமைக்காரன் இருக்கணும். இல்லாமல் போனால் ஏற்படுத்தணும். அவனை எல்லார் வேலைக்கும் ஜவாப்தாரியா வச்சுடணும். சர்க்கார் நன்றாக ஊன்றிக் கவனிக்கணும், பொய், பிரட்டு இல்லாமலிருக்கிறதா என்று. பழைய காலத்து ராஜாக்கள் நவாப்புக்கள் காலத்திலே நடக்கலையா? ஆகணும்னு ஆய்த்தீரணும்."

"தாத்தா! நீங்க சொல்றபடி செய்யறதுன்னு, சண்டை பொறாமை, சச்சரவு ஆகும். கடைசியிலே."

"அடே! சண்டை கலகம் எல்லாம் நடந்த பிறகு தாண்டா க்ஷேமமும் லாபமும். ஏண்டா? அமிர்தம் எப்படி டா உண்டாச்சு? கீழ் மேலா சமுத்திரத்தியே ரகளை பண்ணினத்தக்கப்புறம் தானே! நல்லதும் கெட்டதும் சண்டைபோட்டு ரகளை ஆன பிறகு தானே தேச க்ஷேமம்? நடவடிக்கையிலே,

நஷ்டமும் கஷ்டமும் ஸம்பவிக்கும். மூதேவியும் விஷமும் கூடவந்தது. கடைசிலே அமுர்தம் வந்தது. மழையும் வெள்ளமும் வந்து தானே ஊரெல்லாம் சுத்தமாகிறது? பயிர் பச்சை உண்டாகிறது? க்ஷேமம் உண்டாகிறது? வீடு ஒழுகுகிறதே மாடு நனைகிறதே என்று வருத்தப்பட்டால் ஆகுமா? அப்படிப் பயப்பட்டால் அந்தப் பள்ளிக்கூட ஸ்கௌட்டுகள் தினம் தினம் கொஞ்சம் கொஞ்சம் செய்யட்டுமே, அதுவும் ஒரு நன்மை தானே! ஒரு உபகாரம் இல்லியா? அவாளும் செய்யலாம் நாமும் செய்ய வேண்டியது."

"செய்யலாம் தான். ரோட்டு ஸெஸ்-என்று சர்க்காரிலே வாங்கினுளே. அதையும் கொடுத்துவிட்டு நாமும் ஏன் வேலை செய்யணும்னு ஊரிலே யிருக்கிறவா சொல்லுவா? கூலியும் கொடுத்து எதிர் மூச்சும் போடணுமான்னு எல்லாரும் கேட்கிறு அய்யா!"

"இவா கேட்கிறதும் நியாயம் தான். அதற்குத் தான் நான் முன்னே சொன்னேனே. அந்த மாதிரி அந்தப் பணத்தை ஊர்க்காரருக்கு ஒப்புவித்துவிடறது. அந்த நாட்டாமைக்காரனுக்கு இன்ன இன்ன வேலை செய்துப்பிடணும்னு சொல்லிப் பிடணும். அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு அவன் செய்யட்டும். இல்லியோ, அந்த ரோட்டு வரி வாங்குகிறதில்லை. 'நீங்கள் அதற்கு பதிலாக ரோட்டு போட்டுக் கணும் சரியா வச்சிக்கணும்' என்று சர்க்கார் சொல்லட்டும் முன்காலம் போலே வீட்டுக்கு ஒரு ஆள் ஒரு மண்வெட்டி ஒரு கூடைப் பிரகாரம் இன்ன இன்ன இடத்துக்கு இன்ன வேலைக்காக என்று தமுக்கு போட்டு நடத்தப்படாதோ? வராதவனை பழைய காலப் பிரகாரம் பஞ்சாயத்தில் வைக்கப்படாதா? அப்படி ஒரு கட்டுப்பாடு இருந்தால் எந்த வேலை தாண்டா நடக்காது? இந்த மேலக்குளம் மடமும் நந்தவனக் கிணறு எல்லாம் எப்படிடா உண்டாச்சு? அதைப் பற்றி பின்னாலே சொல்றேன் விவரமாய். ஊரெல்லாம் சேர்ந்து செய்தது தானே. இப்பகூட வாய்க்கால் வெட்டு எப்படி நடக்கிறது ஊரிலே?"

"ஊர்களிலே கக்கூஸ்கள் கட்டறத்துக் கூட என்ன தகருறு? சொல்லுங்கோ."

"தகருறு என்ன இருக்கு? -கட்டவேண்டியது தான். அதிலே யார் போகப்போறு? கட்டடமா கட்டினு எத்தனை கட்டுவா? பொதுவா 2,3 இடத்திலே கட்டலாம். ஜலத்தை எடுத்துக்கொண்டு தேடிக் கொண்டுபோய்க், காத்துக் கொண்டிருந்து உள்ளே போகணும். பொம்மனுட்டிகள் புருஷாள் எல்லாரும் காலமே அங்கே போய் வரிசையாய் கூட்டமாய் நிற்பாளாடா? நின்னுல் நல்ல வேடிக்கை தான். நிற்க வேண்டாம்னு வீட்டுக்கு வீடு கக்கூஸ் இருக்கவேண்டும், பட்டணங்களிலே இருக்கிற மாதிரி. அதைச் சுத்தம் பண்ணறவா யாரு? இல்லாமல் போனு நாற்றம் எடுத்துப் போயிடாதா? தோட்டிகள் போடணும். அவாளுக்கு சம்பளம் எங்கிருந்து வரும்? சர்க்காரிலேதான் பணமில்லை என்கிறுளே. புதுவரியாவது போடணும் இப்போதான் நாமெல்லாம் திண்டாடறமே இன்னம் வரிவேணுமா? இருக்கட்டும் இதெல்லாத்துக்கும் யாரார் இந்த மாதிரி யோசனை சொல்றது?"

"எல்லாம் ஜில்லா அதிகாரிகளும் இன்னம் பெரிய மனிஷாளுந்தான்"

"யார்? யார்?"

"ஒரு மீட்டிங் கூடருள். அதிலே கலெக்டர், டிப்டி கலெக்டர், ஜில்லா இன்ஜினீர், ஜில்லா போர்டு பிரஸிடெண்டு, ஜில்லா டாக்டர் ஹெல்த் ஆபீஸர் இன்னம் 2,3 அஸெம்பிளி மெம்பர்கள் இன்னும் கொஞ்சம் பெரிய மனுஷாள் சேர்ந்து செய்யற யோசனை தான்?"

"எல்லாரும் பட்டணவாஸிகள் தானே! கிருமத்தான்களா ஒன்று இரண்டு பேரிருந்தாலும் பட்டணமே பிரதான வாசஸ்தலமாயிருக்கும் அவாளுக்கு. அவாளும் உத்தியோகஸ்தர் சொல்லுக்கு விரோதமில்லாமலே சரினு ஒப்புக்கொள்வார்கள். எல்லாம் பட்டணப் பழக்கமானதாலே நம்மைப்போல கிராமத்திலே யிருக்கும் நிலைமை தெரியறதில்லை. ஏதோ நம்மையும் பட்டண தினுசிலே நாகரீகப் படுத்தப்பார்க்கிறுப்பலே யிருக்கு. பாவம் அவாள் என்ன செய்வாள்? தெரிஞ்சது அவ்வளவு தான். நம்மைப் போல கிராமத்

திலேயே யிருக்கும் ஏழைகளைக் கூட்டி அடிக்கடி பேசிப் பழகினு வேறேவிதமா யிருக்கும்."

"என்ன? உங்களுக்கு கக்கூஸ் வேண்டாம்னு தோணுகிறதா?"

"நான் எல்லாத்திற்கும் குதர்க்கம் பண்றேன் என்று சொல்றியளேடா? நீங்கள் எல்லாரும் யோசிச்சுப் பாருங்களேன். முன்னே சொன்னேனே கட்டிடக் கக்கூஸ்கள் ஸமாசாரம். குழாய் கக்கூஸ் கதியும் அப்படித்தான் ஆகும். நன்ன யோசனை பண்ணிப்பாருங்கோ."

"ஆமாம் தாத்தா அப்படித்தான் ஆகும் போலே யிருக்கு. நமக்கே சிரத்தையில்லியே. இன்னம் மோசம் தானே மற்றவர்களும் குடியானத் தெருவிலும் சேரியிலும் சரி."

"நாமெல்லாம் வயல் வெளியிலே திரியறவா இல்லியா? தூரமா எங்கியோ வெளிக்குப் போறோம் வறோம். பொம்மனாட்டிகள் குழந்தைகள் அவாவா வீட்டுக் கொல்லையிலே, குழிவெட்டிக்கொண்டு இருக்கா, அங்கே ஒதுங்கரு. இதுக் கென்னத்துக்கு கக்கூஸ்கள் ஒரு சிலவு-கதை?

"சரி சரி. அப்புறம் மருத்துவச்சி ஸமாசாரம் என்ன? வேணுமா? வேண்டாமா ?"

"என்னைக் கேட்டா ? ஊரெல்லாம் கேளுங்களேண்டா ? ஓட்டுப் போடச் சொல்லேன். தெரிஞ்சு போறது. "

"அநேகம் ஊர்களிலேலிருந்து வேணும் வேணும் எல்லாம் வேணும்னு கேட்கிருள் என்று பேபரிலே பார்க்கிறேனே! கிணறு, ரோட்டு, மருத்துவச்சி, டாக்டர் எல்லாரும் வேணும்னு."

"அதுக்கென்னடா கேட்கிறத்துக்கு! யாராவது ஒண்ணுசொன்னுஅவனோடு பத்துப்பேர் கத்துவான். பால்சாப்பிடனும்னு வைஸ்ராய் சொன்னுர். உடனே தேசமெல்லாம் ஓரே கூச்சல்தான். பால் பால் என்ருல் பால் எங்கிருந்து வருகிறது? யார் கொடுக்கிரு? தானம் பண்ற இடம் எங்கே என்று கேட்டார்களா? கூச்சலோடே சரி. பால் கீல் எல்லாம் வந்தூடாப்பிலே தான். வாயாலே எல்லாம் சொல்லிப்பிடலாம். செய்து முடிக்கிறது தாண்டாப்பா கஷ்டம்."

"அப்புறம் மருத்துவச்சி ஸமாசாரம் சொல்லுங்கோ."

"மருத்துவச்சி வந்து என்ன செய்ய முடியும்? இருந்தா நல்லது தான். அவள் சொல்றபடி இந்தப்பொம்மனுட்டிகள் நடக்கணுமே? முன்னே பின்னே இருக்கிற கர்ப்பகால பத்தியம் பலஹாரம் ஓய்வு சௌக்கியம் எல்லாம் எங்கிருந்து வரும்? நம்ப பொம்மனுட்டிகள் தான் நன்ன வயலுக்கு கொளத்துக்கு என்று உழைக்கிருளே. இப்போ தலைப்பட பெண்கள் பாவம் ரத்தம் செத்துச் சோனியாக் கிடக்கிறதுகள். இதுகளுக்கு வேண்டிருந்தால் எப்பவோ ஒரு வேளை. ஆனுல் அவளுக்குக்கூட அந்த மருத்துவ ரீதியிலே, நடந்துகொள்ள சக்தி வசதி பணம் எல்லாம் இருக்கணுமே? ஏதோ போட்டால் ஒரு பெண் பிழைச்சுப்போருள். ஆனுல் ஊரிலே களேபரம்தான்."

---


## விசேஷ அறிக்கை

ஸ்டால் நெ.—88

சென்னை காங்கிரஸ் மண்டபத்தில் நடைபெறும் அகில இந்திய காதி சுதேசிப் பொருட்காட்சி 88 நம்பர் ஸ்டாலில் **அல்லயன்ஸ் கம்பெனி** பிரசுரங்களும் ஸ்வேதாரண்ய ஆச்ரமப் பிரசுரங்களும் **பாரத மணி** முத்துக்களும் கிடைக்கும்.

# கிஸான் பகவன்

(பாலம்)

ஜப்பல்பூர் பக்கம். காடாரம்பம். மேடும்பள்ளமும், சேறும் சகதியுமான விஸ்தாரமான இடம். அந்தக் கிராமத்தில் பத்து இருபது வீடுகள் இருக்கலாம். அனேகமாக எல்லாம் கிஸான்கள் (குடியானவர்கள்) வசிக்கும் தாழ்ந்த வீடுகளே.

அந்தப் பக்கத்துக் கிஸான்கள் நல்ல வாட்ட சாட்டமான தடி ஆசாமிகள். அவர்கள் ஆடு மாடுகள் நன்ருய்ப் பருத்துக் கொழுத்திருக்கும். சொன்னுல்கூட நம்ப மாட்டீர்கள், யமனுக்கு எருமை வாகனம் எதற்காக என்பதன் தாத்பர்யம் அந்த ஊர் எருமை மாடுகளைப் பார்த்த பின்பு தான் எனக்குத் தெரிய வந்தது. அந்தக் கிராமத்துப் பெண்டுகள் அழகென்ருே, விகாரமென்ருே நான் சொல்ல வரவில்லை. ஆனுல் இதுமட்டும் சொல்லுவேன். தலையை முக்காடிட்டுக் கொண்டு, மூக்கிலும் காதிலும் பித்தளை வளையங்களைத் தொங்கவிட்டுக் கொண்டு, கை, கால்களிலெல்லாம் ஈயக்காப்புகளை மாட்டிக் கொண்டு, ஜில் ஜில் என்ற சத்தத்துடனே அவர்கள் கிணற்றுக்குச் செல்லுவதே ஒரு தனிப் போக்கு. அந்தக் கிராமத்துப் பையன்களுக்கு வாலொன்றுதான் பாக்கி. அரையில் கோவணத்துணிதான் இருந்தாலும், கோட்டுக்கும், தலைப்பாக்கைக்கும் குறைச்சலில்லை. தவிரச் சதாசர்வதா கரும்புங் கையுமாக இருப்பார்கள் பிள்ளையாண்டான்கள். எல்லாவற்றையும் சொல்லிவிட்டுக் கடைசியில் கிஸான்களை மறந்துவிடப் போகிறேன். கிஸான்களெல்லோரும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாய் இருப்பதாக என் கண்ணுக்குப் பட்டது. எனக்குத் தெரிந்த பெயர்பெற்ற கார்ட்டூன் வரைபவர் இருக்கிருர்; அவர் அவர்களைப் பார்த்தாரானுல் என்ன போடுவாரென்று எனக்குத் தெரியும். பருத்த அழுக்கு முண்டாசு; உடம்போடு பிறந்த அழுக்குத் கோட்டும் சட்டையும்; அழுக்கு மீசை; அழுக்கு வேஷ்டி; ஒவ்வொரு மணு கனமுள்ள செருப்புகள்; கையில் சோட்டாத்தடி.

சில முக்கியமான விஷயங்களில் பகவன் மற்றக் கிஸான்களிலும் வேறு பட்டவன். அவர்கள் முண்டாசைக் காட்டிலும் இவனது இரட்டை மடங்கு பெரியது. அவர்களெல்லோரும் சட்டையின் மேல் கோட்டுப் போட்டுக் கொண்டால், இவன் ஒன்றுக்கு மேல் ஒன்ருக இரண்டு சட்டையும் அதற்கு மேல் தடிக் கம்பளிக் கோட்டு ஒன்றும் போட்டுக் கொண்டிருப்பான். இவன் செருப்புப் போட்டுக் கொள்வதில்லை. ஒரு மணு கனம் இவனுக்கு எம்மாத்திரம்? ஆகவே இரண்டு மணுகனமுள்ள பூட்ஸுகளை மாட்டிக் கொண்டு, காலில் பூட்ஸு போட்டுக் கொண்டிருக்கும் நினைவே யில்லாதபடிக் குஷாலாய் நடப்பான்.

அந்தக் கிராமத்திலேயே பகவனுக்குத் தனி மதிப்பு. மதிப்பு அவனுக்கு எப்படி வந்தது என்பதற்குண்டான பலான காரணங்களில் அவன் முண்டாசின் கனமும் ஒன்று என்பது சொல்லாமலே விளங்கும். மேலும் பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டவனுனபடியால், 'விட்டோபா' பஜனையில் முக்கிய ஸ்தானம் அவனுக்குத் தான். 'லேஜிம்' முதலிய ஆடுவதிலும் சமர்த்தன். கிராம தேவதைக்குப் பூசை போடும் காலங்களில் தீமிப்பதில் அவனை மிஞ்சியவர்கள் கிடையாது. பகவன் உலக விவகாரங்களும் சற்றுத் தெரிந்தவன். நூறுக்கு மேல் அவனுக்குக் கூட்டத் தெரியுமாம். அந்தக் கிராமத்தில் 'காந்தி ராசா'வைப் பற்றித் தெரிந்தவன் அவன்ஒருவன்தான். இதுவன்றி அவன் எப்பொழுதோ ஒரு சமயம் ஜப்பல்பூர் சென்று வந்திருப்பதால், அவன் மதிப்பு இன்னும் ஒரு முழம் உயர்ந்து விட்டதென்னலாம். ஏனென்ருல் கிராமத்தைத் தாண்டிப் பட்டணத்துக்குச் சென்றவர்கள் இவனைத் தவிர வேறு இல்லை. கிராமத்துக்கே பகவன்தான் தலைவன் என்ருல் கூடப் போதும். கிராமத்துச் சங்கதிகள் எல்லாம் அவனுக்குத் தெரிந்திருக்கும். அறுபது வயதுக்கு மேலாகியும் தினமும் வயலுக்குப் போய் வேலை செய்யாமல் இருப்பதில்லை. அவனுக்குப் பிள்ளை கிடையாது. ஆனுல் தனது ஒரே பெண்ணை உள்ளூரிலேயே கலியாணம் செய்து கொடுத்துப் பெண்ணையும், மாப்பிள்ளையும் வீட்டோடு வைத்துக் கொண்டிருக்கிருன். மருமகன் வயலில் வேலை செய்கிருன் என்ருலும், தினமும் சில நேரமாவது அங்கே சென்று கழித்தால் தான் அவனுக்குப் பாந்தமா யிருக்கும். கிழப் பகவனுக்குத் தன் பேரன் பேரில் அபாரப் பிரியம். பக்கத்து கிராமத்தில் நடக்கும் சந்தைகளுக்குத் தவருமல் 'ஹரி'யை இழுத்துக் கொண்டு புறப்பட்டு விடுவான்.

கார்ன்வாலிஸ் பிரபு காலத்திலிருந்து இன்று வரை ஒரே மாதிரியாய் இருக்கிறது அந்தக் கிராமம். சற்றுக்கூட மாறுதலே யடையாத அந்த இடத்தில் நேரம் எவ்வாறு தான் சென்று கொண்டு வந்ததோ? அறுபது வருஷ காலம் பகவனும் உப்புச்சப்பில்லாத வாழ்க்கையைத் தட்டிக் கழித்துக் கொண்டு வந்திருக்கிறான் அந்தக் கிராமத்தில். அவனுக்குக்கூட ஒவ்வொரு சமயம், "சே! இதென்ன ஊர்? இவ்வளவு வருஷமாக நானும் பார்க்கிறேன் ஒரு விசேஷமாவது நடக்காதா?" என்று மனத்தில் படுவதுண்டு. சொந்தக் கிராமத்தின் பேரில் அவனுக்கு அன்பு விட்டுப் போய் விட்டது என்பதல்ல. அம்மாதிரி எண்ணுவது அவன் நிலைமையிலுள்ள எல்லாருக்கும் சகஜம்.

ஆனல் இப்பொழுது யாரும் எதிர்பாராத விதத்தில் அந்தக் கிராமச் சரித்திரத்தின் போக்குக்கே மாறுபட்ட ஒரு விசேஷ சம்பவம் நடப்பதென்றால், யாருக்குத் தான் ஆச்சரியமா யிராது? உண்மையைச் சொல்லப் போனால், இந்தச் சம்பவம் அப்பேர்ப்பட்ட பகவனையே தூக்கி வாரிப் போட்டது.

அன்று பகவன் வழக்கம்போல் நிலத்துக்குப் போயிருக்கிறான். சூரியன் உச்சிக்கு வந்ததும் வேலையை முடித்துக் கொண்டு என்றும் போலத் திரும்புகிறான். ஆனல் அப்பொழுதும் அவனுக்குத் தனது கிராமத்துக்கு நேரப் போகும் புதிய அனுபவத்தைப் பற்றித் தெரியாது. வீட்டை நெருங்கும்போது அவனுக்கு என்றுமில்லாதபடி கிராமத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டிருப்பதின் சின்னங்கள் மிகவும் தெளிவாகத் தெரிந்தன. தெருக்கோடியில் பகவனைக் கண்டதுமே, நாலைந்து பையன்கள் இவனை நோக்கி ஓடி வந்தார்கள். கிராம வாழ்க்கையிலேயே புதிய புரட்சி உண்டாகப் போகிறது என்பதை நினைக்கவும் கிழவனுக்குச் சந்தோஷமும், உற்சாகமும் பொங்கிக் கொண்டு வந்தன. அவன் வாயெடுத்துக் கேட்பதற்கு முன்பாகவே பையன்கள் மூச்சு வாங்க அரையுங் குறையுமாகச் சங்கதியைச் சொல்லி முடித்தார்கள். அவர்கள் சொல்லியதிலிருந்து, சாலையோரமாக மோட்டார் வண்டி யொன்று நிற்பதாகவும், அதில் பட்டணத்து வாசிகள் சிலர் வந்திருப்பதாகவும் தெரிய வந்தது. ஒரு பையன் அவர்களுடைய நடையுடை பாவனைகளை வர்ணித்தான். 'நம்முடைய பாஷைதான் பேசுகிறார்கள்' என்று வியந்தான் மற்றொருவன். ஆனல் பகவனுக்கு இதெல்லாம் திருப்திப் படவில்லை. அவனுக்கிருந்த ஆத்திரத்தில், மேலே காது கொடுத்தும் கேட்கமாட்டான் போல் தோன்றியது. யார், என்ன காரணத்துக்காக வந்திருக்கிறார்கள் என்று தானே நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளா விட்டால் தலைவெடித்துப் போய்விடும் போலிருந்தது அவனுக்கு. பேரனை அழைத்துக் கொண்டு பையன்கள் சுட்டிக் காட்டிய திக்கை நோக்கி நடையைக் கட்டினான். பெரியவர்களான கிஸான்கள் சிலரும் பின் தொடர்ந்தார்கள்.

சாலை யோரத்தில் ஒரு லாரி இருந்தது. மரத்தடியில் ஏழெட்டுப் பேர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களது குல்லாயைப் பார்த்ததுமே பகவனுக்கு 'ஓஹோ, ஸரி!' என்று புரிந்து விட்டது. சந்தேகமில்லை, அவ்வளவு பேரும் காந்திக் குல்லாக்காரர்கள் தான். அதாவது, நாகரிக பாஷையில், காங்கிரஸ்காரர்கள். ஆனல் அவர்கள் இங்கு வரக்காரணம்? அது தான் பகவனுக்கு விளங்கவில்லை. இவர்களைக் கண்டதும் மூக்குக் கண்ணாடி போட்டுக் கொண்டிருந்த ஒரு காங்கிரஸ்காரர் (அவர் தான் மற்றவர்களுக் கெல்லாம் தலைவரோ?) முன்னால் வந்து நமஸ்காரம் செய்தார். பகவன் முதலியவர்களும் பதில் கும்பிடு போட்டார்கள். அந்த மூக்குக் கண்ணாடிக்காரரின் திருஷ்டி எவ்வாறோ அவ்வளவு பேரையும் விட்டுவிட்டுக் குறிப்பாகப் பகவன்மீது விழுந்தது. முண்டாசு, கிர்தா மீசை முதலியவற்றைக் கண்டதுமே ஊருக்குப் பெரிய மனுஷன் இவன்தான் என்று தீர்மானித்து விட்டார் போலிருக்கிறது. சற்று நேரத்தில் அவனுடன் பேச்சில் இறங்கிவிட்டார். அவனுடன் பேச்சில் இறங்கினால், முழுகித் திளைத்துத் திக்கு முக்காட வேண்டுமேயன்றிக் கரை காண முடியாது என்னும் உண்மை அவருக்குத் தெரியாது போலும். என்ன காரணத்தினாலேயோ அந்த மூக்குக் கண்ணாடிக்காரர் அந்தக் கிராமத்தின்மேல் அவ்வளவு கர்ம சிரத்தை கொண்டு விபரம் ஒன்றும் பாக்கி விடாமல் கேட்க ஆரம்பித்தார். பகவன் அவ்வளவு கேள்விகளுக்கும் தக்க பதில் சொல்லிக் கொண்டு வந்தானென்றாலும், அவர் ஒவ்வொன்றையும் பற்றிக் கேட்கும் போதும் சிரிப்பு வந்தது அவனுக்கு. 'கிணற்றுத் தண்ணீர் இந்தப் பக்கத்தில் நன்றா யிருக்குமா? உப்புக் கரிக்காதே? சமீபத்திலேயே தண்ணீர் கிடைக்குமா? அல்லது அதிக ஆழம் தோண்ட வேண்டுமா? கிராமத்திலே நெய் பாலுக்குக் குறைச்சலில்லையே?" இதெல்லாம் என்ன கேள்விகள்? இதுகூட அவனுக்கு விநோதமாய்த் தோன்றவில்லை. எல்லாவற்றையும் விட்டு விட்டு, முப்பது வருஷ காலமாய்த் தண்ணீர் வற்றி வடிந்து கட்டாந்தரையாக இருந்த அந்த ஏரியைப்பற்றி அந்த மனுஷ்யருக்குள்ள கவலையைப் பார்த்துத் தான் அவ

னுக்குத் தாங்க முடியாமல் சிரிப்பு வந்தது. மழை காலத்தில் மழை ஜலம் தேங்குமா, சகதியாய்ப் போகுமா, குளிர்காலத்தில் குளிருமா, வெயில் காலத்தில் வெயிலடிக்குமா— இன்னும் இதுபோன்ற அசட்டுக் கேள்விகளை கேட்டதும் கிழவன் சிரித்தே விட்டான். ஆனால் அவர் கொஞ்சமும் அவமானப் பட்டவராய்த் தோன்றாமல், மேலும் மேலும் தொடர்ந்து ஏதேதோ கேட்டுக் கொண்டேயிருந்தார். பகவன், அவர் கேட்க வேண்டியதை யெல்லாம் கேட்டு முடிகிற வரையில் பொறுத்துக் கொண்டிருந்து விட்டுத்தான் அவர்மீது கேள்வி மாரி பொழிய ஆரம்பித்தான். "நீங்கள் காந்தி மகாராசாவின் மந்திரி தானே, அதுதான் பார்த்தேன்...ஹி.ஹி.ஹி. உங்கள் உடுப்பைக் கண்டதும் கண்டுகொண்டேன், ஹி.ஹி.ஹி."—என்ன சாதுர்யமான கேள்விகள் பாருங்கள். மூக்குக் கண்ணாடிக்காரர் 'உம்—உம்' என்று தலையசைத்தாரானாலும், மனத்திற்குள் நமது தேசக் கிஸான்களின் அப்பாவித் தனத்தைக் கண்டு அவருக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அவர் வாய் விட்டுச் சிரித்து விடவில்லை, நாகரிகமாகப் புன்முறுவல் பூத்தார். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு கடைசியில், "காந்தி மகாராசாவைக் கட்டாயம் இந்த ஊருக்கு வரச் சொல்லுங்கள்" என்று கிராமத்தின் சார்பாக ஒரு விண்ணப்பமும் செய்து கொண்டு, பழைய படி பெரியதாக ஒரு கும்பிடு போட்டுவிட்டு மற்றவர்களுடன் திரும்பினான் பகவன். பெரிய சன்னத்து வாங்கினவனை வரவேற்பதுபோலக் கிராமத்திலுள்ள ஆண் பெண்ணடங்கலும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒவ்வொருவருக்கும் பகவன் என்ன சொன்னான்? "காந்தி மகாராசா கொஞ்ச நாளில் இங்கு வந்து பட்டங்கட்டிக் கொள்ளப் போகிறார்" என்றுதான். நமது கிராமத்துக்கு வாய்த்த அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!

பகவனுக்கு மூளையில்பட்டது அவ்வளவுதான். வருகிற மார்ச்சு மாதம் அவர்கள் கிராமத்தில், அதுதான் திரிபுராவில், (மன்னிக்க வேண்டும், கிராமத்தின் பெயரை முதலிலேயே தெரிவிக்காம லிருந்தது என் தப்புத்தான்) ஐம்பத்திரண்டாவது காங்கிரஸ் மகாசபை கூடப்போவ தென்பதைக் கண்டானா அவன்?

அடுத்த நாள் அதே லாரி சாலையோரமாக வந்து நின்று கொண்டிருக்கிறது. முன்பு ஒரு காலத்தில் ஏரியா யிருந்த அந்த விசாலமான மைதானத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் ஓடியாடிச் சங்கிலி பிடித்து அளந்து கொண்டிருக்கிறார்கள். கையிலிருந்த கரும்புக் கழியிலிருந்து சாறு சொட்டுவதையும் கவனியாமல் மைதானத்தின் பக்கமே பார்த்துக் கொண்டிருக்கிறார்களே இந்த மாட்டுக்காரப் பையன்கள், இவர்களுக்கு இதெல்லாம் என்ன புரியும்? இன்னும் நான்கு மாதங்களுக்குப் பிறகல்லவா தெரியும், திரிபுராவுக்கேற்பட்ட அதிர்ஷ்டத்தின் உயர்வு.

---

# கொல்லும் கிரணம்

ஸ்ரீ. ஆர்தர் காக்ஸ்ஹெட் என்ற ஆராய்ச்சியாளர் எட்டு வருஷம் ஆராய்ச்சி செய்து கொல்லும் கிரணத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். அந்த கிரணம் நிச்சயம் இனிமேல் யுத்தமே நிகழாமல் தடுத்து விடும் என்பது அவரது நம்பிக்கை.

அந்தக் கிரணம் நூறு மைலுக்கு அப்பால் மழையை உண்டாக்கக் கூடியது; புயலை உண்டாக்கக் கூடியது. அதனால் எவ்வளவு ஹதம் வேண்டுமென்றாலும் செய்யலாம். இந்தக் கருவியால் சூரியனின் கிரணங்களை இழுத்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் மகா சக்தியுடன் செலுத்த முடியும். ஒரு கப்பலின்மீது அந்த சாவு கிரணத்தைச் செலுத்தினால், கப்பலிலுள்ள எவரும் உயிரோடு இருக்க முடியாது. அதைச் சுற்றியுள்ள சமுத்திர ஜலம் தளதளவென்று கொதிக்க ஆரம்பித்து விடும். அந்தக் கப்பலில் வெடி மருந்து வைத்திருந்தால் அத்தனையும் வெடித்து எரிந்து போகும்.

இந்த சாவு கிரணத்தின் எல்லைக்குள் எந்த ஆகாய விமானமாவது பறக்குமானால் அது எரிந்து சாம்பலாகி விடும்.

இதைக் கண்டு பிடித்த ஆராய்ச்சியாளர் அளித்த ஒரு பேட்டியில் பின் வருமாறு கூறினார்.

"மனித வர்க்கத்தை அழிப்பதற்காக நான் இதைக் கண்டு பிடிக்கவில்லை. இனிமேல் ஒரு யுத்தமும் நிகழாதென்று நினைக்கிறேன்."

"நான் இஷ்டப்பட்ட இடத்திலெல்லாம் இதைக் கொண்டு மழையை வருவிக்க முடியும். இந்த வழியால் நான் யுத்தத்தைத் தடுப்பேன். நான் இந்த வயலில் இந்தக் கருவியை இயக்கினால் அடுத்த வயலில் ஒரு பயங்கரப் புயலை எழுப்புவேன். அந்தப் புயலில் வெளிப் பிரதேசங்கள் அழிந்து போகும்."

# குதிரைப்பந்தயம்

["ரஸிகன்"]

காமாக்ஷி—அடே, மாது, இந்தக் காப்பியெக் கொண்டெ ஓங்கப்பாகிட்டக் குடு.

மாது—(கீச்சுக் குரலில் கூடத்திலிருந்து உரக்க)—அப்பாக்குக் காப்பி வாண்டாமாம்மா.

கா—ஓகோ, கோவம் வந்துட்டுதாக்கம். பொழுது விடியாதுக்கு முன்னே காப்பி ஆகவேண்டிருக்கு. இல்லாபோனு மூக்குக்குமேலே கோவம் வந்துடரது. பால்காரன் பால் கொண்டுவந்தாத்தானே. அவனுக்கு மூணுமாசத்துப் பணம் பாக்கிருக்கு. அவன் கொடுத்தபோதுதானே வாங்கிக்கணும், தண்ணியோ, கிண்ணியோ? ஓங்கப்பாக்கு சக்கரை ஒரு வண்டி வேண்டிருக்கு. நாலு நாளைக்கு ஒரு விசை ஆகரது. சுப்பஞ் செட்டி, "கடன் கிடன் வந்து கேட்டாத் தெரியுஞ் சேதி, பாக்கிப் பணத்தை கிழ வச்சுட்டு மறு காரியம் பாரு"ன்னு, யாரிருக்கா இல்லையின்னு கூடப் பார்க்காமே எறையரான். அடுத்தாத்திலே போய் ஒருதரத்துக்கு ரெண்டு தரமா ஒரு கரண்டி சக்கரை கடன் கேட்டா, மூஞ்சியெ தூக்கிண்டு, "இதென்ன, அம்மாமி, இதே காரியமாப் போச்சே ஓங்களுக்கு? பட்டணவாஸத்திலே ஒத்தருக்கு ஒத்தர் குடுக்க முடியுமோ"ன்னு இடிச்சுக்காட்டரா, மானம் போரது. நல்ல வேளையா, ஆவாரம்பூக் காப்பி சாப்பட ஆரம்பிச்சத்துக்கப்பரம் காப்பிக்கொட்டைச் செலவில்லே. அது மாதிரி மண்ணெத்தின்னு வயறு வளக்கர பழக்கம் பண்ணிப்பிட்டால் கவலையத்திருக்கலாம். பாழும் வயறு கேழ்க்கல்லையே.

[இவள் இம்மாதிரி கூடத்தில் கேட்கும்படி வெறுப்பாய்ச் சொல்லிக்கொண்டு, அடுப்பண்டை குனிந்து காரியம் செய்து கொண்டிருக்கையில் 10 வயதுள்ள ஒரு பெண் உள்ளே வருகிறாள்.]

ராஜம்—ஏன் அம்மா எறையரே, அப்பாக்கு தலையெ வலிக்கிரதாம், அதான் காப்பி வாண்டான்னுட்டா.

கா—ஆமாண்டீ, தலையெ வலிக்காமெ என்ன பண்ணும்? ராப்பகலில்லே, குதிரெப் பந்தியக் கடுதாசுங் கையுமா, கண்ணெக் கவிஞ்சுண்டு, என்னவோ எழுதரதும், கூட்டரதும், கழிக்கரதும் ஓச்சலொழிச்சலெக் காணும். அஞ்சணுவும், பத்தணுவுமா எத்தனெ ரூபா தொலச்சிருக்கு இந்தப் பத்து வருஷமா! அதெச் சேத்து வச்சிருந்தா சிவனேன்னு ஊர்லே போய் ஒக்காரலாம். வீட்டு வாடகையாவது இல்லாமெருக்கும். ஆச்சு, கோர்க்காலியாட்டமா பொண்ணெண்ணு வளர்ரது கல்யாணத்துக்கு. ஊர்வாயிலே ஆப்பாமெ எப்படித்தான் நடக்கப்போரதோ—ஏதுக்கடீ நிக்கரே, எரும்மாடே, அவருக்குக் காப்பி வாண்டாம்னு, நீயும், மாதுவுமாச் சாப்பிட்டு பாத்திரத்தைத் தேய்.

ரா—அம்மா, நீதான் அதெச் சாப்படேன். நீ காப்பி சாப்பிட்டு ரொம்ப நாளாச்சே.

கா—ஆமாங், எனக்கு அது ஒண்ணுதாங் கொறவு. ரெண்டு வேளை சாதம் ஆப்பட்டாப் போராதா?

[காமாக்ஷியின் அத்தங்காள் சுந்தராம்பாள் இடைக்கட்டு வாசற்படியைத்தாண்டிச் சமயலரைக்குள் வருகிறாள். இடுப்பில் காஞ்சீபுரம் புடவையும், காதில் வைரக் கம்மலும், கையில் அடுக்கடுக்காய் வளைகளும் அணிந்து ஐசுவரியத்துக்குள்ள அந்தஸ்தோடு நடக்கிறாள்.]

சு—என்னடி, காமாக்ஷி, இன்னும் சமயலுக்கு அடுப்பு மூட்டல்லையா?

கா—காப்பிக்கடெ இப்போதான் ஆச்சு. இன்னிக்கி என்னவோ கடெ யில்லியாங்.

[அவள் புருஷன் வெங்கட்டராமய்யருக்கு மளிகைக் கடையில் குமாஸ்தா வேலை.]

சு—அப்பொ ஏதாவது கால வேளெலே அதிகப்படி உண்டோ?

கா—எப்போதும் உள்ளதைச் சாப்பிட்டாப் போராதா. அவருக்கின்னிக்கிக் காப்பிகூட வாண்டான்னுட்டார், செல்லலையாம்.

சு—ஆமாங், என்னமாச் செல்லும்? ராமாளாத்துச் சுப்பிரமணியனோடே சேந்துண்டு க்ளப்பிலேபோய் இட்டலி, அல்வா துண்டு, காப்பி எல்லாம் ஒரு ஈடு ஆயிட்டா?

கா—நன்னாயிருக்குடீ, நீ சொல்ரது! நேத்திராத்திரிக் கூடச் சரியாச் சாப்படல்லெ, தலையெ வலிக்கிரதுன்னு இன்னிக் காலம்பர எழுந்து வாசல்லேயே போகலையே.

சு—அதென்னவோ எனக்குத் தெரியாதம்மா. நாள் தப்பினாலும் தப்பும், ஒங்காத்துக்காரர் காப்பிக்ளப்புக்குப் போரது தப்பரதில்லெ. தெருவிலே யாரைவேணுமானாக் கேட்டுப்பார்.

கா—ஏது, எங்காத்துக்காரர் சேதிதான் இந்த ஊர்லேயே அடிபடராப்பிலேருக்கு! போகட்டும். பொரத்தையாராத்திலே போய் நிக்கல்லெயே. காப்பிகிளப்புக்குத்தானே போரார்.

சு—அப்படியா—தினம் அரைக்காலும் காலும் எங்கேருந்து வருமுன்னு கேக்கராளோல்லியோ, ஊர்வாயெ மூடமுடியுமோ? போராத்துக்கு, சுப்பிரமணியன் ஆம்படையாள் ஆத்திலே குளத்திலே ஒரெடம் பாக்கியில்லே, "என்னாம்படையானைக் கூடிக் கூடிக் கெடுக்கரான் கழிச்சல்லே போரவனெல்லாம், காப்பிக்கிளப்புக்கும் குதிரைப் பந்தியத்துக்கும், அதுக்கும் இதுக்கும் இழுத்துண்டு போய்"யின்னு பண்ரமாலாசு கணக்கு வழக்கில்லெ.

கா—ஆகா, அவாம்படையான் கோடீசுரன், கொடையிலே கர்ணன்! அல்பக் கழுதெ, வாயிலே வந்ததெச் சொல்ரதாக்கும். அது கடக்கட்டம், எங்கே, காலவேளேலே அபூர்வமாயிருக்கே நீ வந்தது?

சு—ஒண்ணுமில்லே, ஜானகிக்கி ஒரு புல்லாக்கு பண்ரத்துக்கு அவப்பா நேத்திக்கி வைரம் வாங்கிண்டு வந்தா. அது தேவலையான்னு ஒங்கிட்டக் காட்டிட்டுப் போவோமன்னுதான் வந்தேன்.

கா—நான் ரொம்ப நோட்டக் காரியாச்சே, அதுக்காகவா? இல்லெ காதிலேயும் கழுத்திலேயும் வைரமாத் தொங்கரதா எனக்கு?

[கையை நீட்டிப் பொட்டணத்தை வாங்கிப் பிரித்து, வெளிச்சத்தில் கற்களை உற்றுநோக்குகிறாள். சுந்தராம்பாள் அவள் கழுத்தை அண்ணாந்து பார்க்கிறாள்.]

சு—எங்கே, ஒன் சரட்டையும் பதக்கத்தையும் காணும்.

கா—(அது காதில் விழாதது போல்) வைரம் ரொம்ப நன்னாயிருக்கு. ஒரு தோஷமுமில்லை. சரி, நாழியாகரதுடீ, அம்மா, ஒரு மூட்டெ துணி கடக்கு தோய்க்கணும்.

சு—(எழுந்திருந்து) நான் இதோப் போரேன். கேட்டேன், சொல்லலையே? சரடும் பதக்கமும் எங்கே?

கா—(தலை குனிந்து எதையோ கவனிப்பவள் போல)—மொகப்பு ஒடிஞ்சிருக்கு, பதக்கத்திலேயும் ரெண்டு கல்லு விழுந்துட்டுது, எடுத்து உள்ளே வச்சிருக்கேன்.

[குடத்தையும், துணிகளையும் கையிலெடுக்கிறாள். அது கண்டு சுந்தராம்பாள் விடைபெற்று வெளியே போகிறாள்.]

கா—(தனக்குத் தானே) பணத்திமிறு, அவ என்ன பண்ணுவள்! வீட்டு வாடகை கொடுக்கரத்துக்கு சங்குப் பத்தனுண்டே சரட்டை அடகுவச்சது அவளுக்கு தெரியாதுபோல மாமாலம் பண்றாளே, அவாத்துக்காரர் தானே பத்தன் வழியா இந்த ஊர் முழுக்க ஈடு புடிக்கிறார், ஒண்ணரை வட்டிக்கு!

[பேச்சுக்குரல் அடங்கினதைக் கண்டு காமாக்ஷி கொல்லையில் போயிருப்பாளென்று வெங்கட்டராமய்யர் மெதுவாக சமயலுள்ளே வருகிறார். அவருக்கு 35 வயதிருக்கும். ஸதா வெற்றிலை போட்டு வெந்துபோன கடைவாயும், ரத்தக் குறைவால் வெளுத்த தேகமும், அழுக்கு வேஷ்டியும் முகத்தில் உற்சாகம் குன்றினதோற்றமும் அவர் கஷ்டமான நிலையைக் குறிக்கின்றன. காமாக்ஷியைப் பார்த்ததும் அவசரமாய்த் திரும்பிப் போக எத்தனிக்கிறார்]

கா—(ஆத்திரத்துடன்) ரேஸ் கடுதாசு விட்டுதா? இத்தனெ நாளா வீட்

டோடேருந்தது. இம்மே ஊர் சிரிக்கும் போலேருக்கு.) 2000 ரூ. நகையோடே வந்தேன். ஒண்ணொண்ணு-வித்துச் சுட்டு தொலெச்சாச்சு, பந்தியம், பந்தியம், பந்தியமுன்னு. மஞ்சக் கயத்திலே கோத்துக் கட்டிண்டிருக்கிர ரெண்டு குண்டும் ஒரு திருமங்கலியமும் தான் பாக்கி. இப்போ மானவெக்கத்தை விட்டு ஊரா ருண்டே பிச்சை யெடுக்க ஆரம்பிச்சாச்சு. அப்படிக் காப்பியும் இட்டலியும் சாப்படாபோனு என்ன, உசுரா போயிடும்? ஒரு ஒரு பரத நாய் பேசர பேச்சைக் கேட்டால் எனக்கு நாக்கைப் புடுங்கிண்டு பிராணனே விட்டால் தேவலேப் போலே ருக்கு.

வே—நீ நாக்கைக் கீக்கைப் புடிங்கிக் கொள்ள வேண்டாம். நான் தொலேயரேன். நீ அப்பரம் சுகமாயிரு. என்னைக் கலியாணம் பண்ணினதுக்கப்பரந்தானே ஒனக்கு தெரித்திரம், அதுக்கு மின்னடி நீ பேஷ்கார் வீட்டுப் பொண்ணுங்கரது எனக்கு மரக்கல்லே.

கா—ஏறுமாறுன்னு, இதாங் வாய்க்கு வாய். எங்காத்து வரிசையை ஒங்களிண்டே குலாவிக்கவரல்லே. ஆனு, ஏழையோ, பணக்காராளோ, ஊரார் வம்பு வளக்காமெ எத்தனயோ பேர் காலந்தள்ளல்லேயோ? அது போலே, இருக்கோ, இல்லேயோ, நம்ம சேதி வெளிக்கித் தெரியாமென்னு இருக்கணும். வயத்தைப் பசிச்சா ஈரத்துணியைப் போட்டுண்டு சிவனேன்னு படுத்திருக்கிறது! பொரத்தயான் காசுகுடுத்து காப்பிவாங்கிக் குடிச்சு நாக்கு சப்புக் கொட்டு வானேங்?

வே—சினேகிதன்னிருந்தா ஒத்தருக்கொத்தர் காப்பி வாங்கிக் குடுக்காது தான். இதெப் பெரிய காரியமாய்க் கொட்டிக் கொட்டி அளக்கிறயே. [ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு] போகட்டும். குட்டி காதுத் தோட்டைக் குடேன், கொஞ்சம் முடையிருக்கு, வித்துட்டு அடுத்த தை மாசம் நல்ல தாய் ஒண்ணு வாங்கிப் போடரேன்.

கா—வந்துட்டீரா வழிக்கி? என்னைக் காது மூளி கழுத்து மூளியா அடிச்சாச்சு, எங்கொழந்தை தலேயிலேயும் கைவைக்க ஆரம்பிச்சுட்டீரா? அடுத்த தை மாசமா வாங்கிப் போடப்போரீர்! இது வரையிலும் எதெல்லாம் வித்துட்டு மறுபடி வாங்கிப்போட்டிருக்கீர்? விரல் மடக்கும்—இப்பொ என்ன எழவு வந்துட்டுது,பணத்துக்கு?

வே—சரி, சரி, ஒண்ணுமில்லே.

[கூடத்தில் பேச்சுக்குரல். குழந்தை ராஜம் அவசரமாய் உள்ளே ஓடி வருகிருள்]

ரா—அப்பா, ஒரு மீசை வைச்சுண்டு டவாலி போட்டுண்ட சேவுகன் வந்திருக்கான், ஒன்னைக் கூப்படரான்.

[சேவகன் என்றதும் காமாக்ஷியம்மாள் பதறுகிருள்]

கா—அய்யோ, சேவுகனு? அவன் எங்கே வந்தான்? இது என்ன ஆபத்து?

[வெங்கடராமையர் அசைவற்று மரம் போல் நிற்கிருர். இரண்டு கண்களிலும் இரண்டு நீர்த்துளி கிளம்பி கன்னத்தில் வழிகிறது.]

கா—என்ன கேக்கறேன், மரம் மாதிரி நிக்கரேளே! எனக்கென்னவோ செய்யரதே!

வே—எனக்குப் போர காலம் வந்துட்டுது.

கா—என்ன, என்ன? அய்யோ, புதுரு போடனுமா, வாயெத்தறந்து சொல்லப்படாதா?

வே—போன சனிக்கிழமை கிண்டிக்குப் போரபோது கடை கையிருப்பிலேருந்து ரூ 100 எடுத்துண்டு போனேன். எல்லாம் அங்கே தொலேந்து போயிட்டுது. அதுக்காகத்தான் கொழந்தை தோட்டைக் கேட்டேன். நீ ஆயிரம் வெசவு வெசெ! அந்தக் கணக்குப் பிள்ளே அய்யங்கார் இருக்கானேல்லியோ, அவன் ரொம்ப நாளா எம்பேரிலே கெருவிக்கிண்டிருந்தான். என் தலேக்குப் பாக்கு வைக்க வந்துட்டான். ஜெயிலுக்குப் போக வேண்டியதுதான். மனசு போல ஆச்சு மங்கிலிய வாழ்வு.

கா—அய்யோ, பாவீ, குடிகெட்டுப் போச்சே. இப்படி வாயெ மூடிண்டிருந்து கொழந்தைகள் தலேலே கல்லெத்தூக்கிப் போடணுமா! அன்னிக்கே எங்கிட்ட உள்ளதைச் சொல்லப் படாதா? பகவானே, என்ன பண்ணுவேன்!—ராஜம், சட்டுனு ஓடிப்போய் சுந்தராம்பாளே

அவாத்துக்காரரை அழச்சுண்டு கை யோடே இட்டுண்டுவா.

[ராஜம் நடுங்கிக்கொண்டு ஓடுகிறாள். கூடத்திலிருந்து உரத்த குரலில், "வெங் கட்ராமய்யரே, அடுப்பங்கரையில் பதுங் கிப் பிரயோஜனமில்லே. வெளியே வாரும்!" என்ற வார்த்தைகள் காதில் விழ, வெங்கடராமய்யர் நிர்ஜீவனாய் ஆகி றார். காமாக்ஷி அவர் நிலைமையைக் கண்டு வருந்திக் கை சைகையால் தேற்ற முயலுகிறாள். சுந்தராம்பாளும், தொந்தி பருத்த அவள் புருஷனும் வருகிறார் கள். ராஜம் பின் தொடர்ந்து வருகி றாள்.]

ராகவய்யர்—இது என்ன, வெங்கட்ட ராமா, மானக் கேடாயிருக்கிறதே! பண மில்லா போனால் சூதாடர மொம்மரத் திலே பொரத்தையான்பணத்தைக் கையா ளச் சொல்லிருக்கோ?

வே—அத்தான், கோபித்துக் கொள் ளாதேயுங்கள், தெரியாமல் செய்து விட் டேன். என்னை இந்த சமயம் காப்பாத்த வேணும். எனக்காக இல்லா போனாலும் இவள் பேரிலும் இந்தக் கொழந்தைகள் பேரிலும் இரங்கி இந்தப் பெரிய உபகா ரம் செய்யவேணும்.

ரா—ஆமாம், ஊரிலிருக்கிறவன் பெண் டாட்டிபிள்ளைக் கெல்லாம் நான் தாலி யறுத்தால் என்பெண்டாட்டி பிள்ளையெல் யாம் சந்திலே நிக்கவேண்டியதுதான்.

சு—போரும். கன்னாப் பின்னான்னு பேச வேண்டாம்.

கா—(தீனமான குரலில்)—அம்மா, சுந்தராம்பா, எங்குடியைக் காப்பாத்துடீ. சோத்துக்குத் துணிக்கிக் கஷ்டப்படரோ முன்னு வருத்தப்பட்டேன். இப்படி அவமானம் வருமுன்னு சொப்பனத்திலே யும் எண்ணல்லே. இம்மே வெக்கம் என்ன வெச்சுருக்கு, ஓங்கிட்டச் சொல்ல ரேன். என்னிண்டே ஒரு திருகாணி கூட இல்லே. எல்லாம் வித்து காலக்ஷேபம் பண்ணியாச்சு. இந்த ரூ 100 ஓங்காத்துக் காரரைக் கொடுக்கச் சொல்லு, எங்கேயா வது மாசம் 4 ரூபாய்க்குக் காரியஞ் செஞ் சாவது அதை அடெச்சுடரேன். நான் வேறே என்ன சொல்லுவேன்?

சு—காலம்பர ஒன்னும்படயான் குத ரைப் பந்தியத்திலே காசைத் தொலைக்கி ரான்னத்துக்குப் பாஞ்சு பாஞ்சு சண் டெக்கு வந்தயே, நீ மூடி மூடி வெச் சுண்டா சரியாப்போச்சா? இம்மேயாவது நிதானமாய்ப் பேசு. பணம் வேணுமானா ஓம்பொண் காதுத் தோட்டை அடகு குடுக்கணம். இல்லாபோனா இது என்னைப் புடுங்கித் தின்னுடும்.

[ராஜம் சரசரவென்று தோட்டைக் கழட்டிக் கொடுக்கிறாள். காமாக்ஷி மூஞ் சியைக் கையால் மூடிக்கொண்டு பேசா மல் நிற்கிறாள். சுந்தராம்பாளும் ராகவய் யரும் வெளியே போகிறார்கள். வெங் கட்டராமய்யர் ஸம்ஸாரத்தை இரண் டொருதரம் கீழ்க்கண்ணால் பார்த்து விட்டுக் கூடத்துக்குப் போகிறார்.

திரை]

(இதில் நடிப்பு முதலிய உரிமைகள் ஆசிரியரைச் சேர்ந்தன).

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொது வாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங் களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# செல்லப் பெயர்

"வஸந்தன்"

செல்லமாகப் பெயரிட்டு அழைப்பதென்றால் நமக்கு எல்லோருக்கும் சந்தோஷம். நம்மை செல்லமாகக் கூப்பிட்டால் நமக்குக் குதூகலம். உதாரணமாக வைத்தியநாதஸ்வாமியை நான் 'வைத்தி' என்று கூப்பிடும்போது அவன் பல்லெல்லாம் தெரிகிறது. எவ்வளவு பெரிய மனிதர்களாகத்தான் இருக்கட்டும் அவர்கள் கூட இந்தச் செல்லப் பெயர்களின் வலையில் சிக்காமல் இருக்க மாட்டார்கள். என் நண்பன் வராகமூர்த்தியை 'வராகம்' என்று கூப்பிட்டால் அவன் மட்டுமல்லாமல் எல்லோரும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்.

வீட்டில் குழந்தைகளைச் செல்லப் பெயரிட்டு அழைப்பது வெகு சகஜம். இந்த வழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வருகிறது. பள்ளிக்கூடங்களில் இந்த வழக்கம் தலையைக் காண்பித்து இப்போது வெகுவாகப் பரவிவிட்டது.

நான் படித்த ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டரை 'அடைமாங்காய்' என்று நாங்கள் செல்லமாகக் கூப்பிடுவதுண்டு. (அவருக்கு எதிரே அல்ல) 'அடைமாங்காய் வந்துவிட்டது?' என்றால் 'ஹெட்மாஸ்டர் வந்துவிட்டார்' என்றுதான் அர்த்தம்.

ஏன் எங்கள் ஹெட்மாஸ்டருக்கு 'அடைமாங்காய்' என்று பெயர் வந்ததென்றால் அதற்குக் காரணம் அவருக்கு மாங்காய் ஊறுகாயில் ரொம்பப் பிரியம். இந்த ரஸமான விஷயம் எப்படிப் பகிரங்கமாக வந்தது என்பதுதான் ஆச்சர்யம்.

பாவம்! எங்கள் கணக்கு வாத்தியார் சாமிநாத அய்யர் ஒரு அப்பாவி. அவரைப் பையன்கள் படாதபாடு படுத்துவார்கள். அவருக்கு 'போஸ்ட்பாக்ஸ்' என்று செல்லப் பெயர் கொடுத்தார்கள். எப்போது பார்த்தாலும் கிழிசல் சட்டை போட்டுக்கொண்டு வந்ததால் வேறு நல்ல செல்லப் பெயர் அவருக்குக் கொடுக்க முடியவில்லை!

நல்லது; வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் செல்லப் பெயர் இருந்து விட்டு போகட்டுமென்றால் வாழ்க்கையிலும் ஏதேஷ்டமாக இருக்கிறது. 'ருத்திராக்ஷப் பூனை' 'சிடுமூஞ்சி' 'ஊமைக் கோட்டான்' என்று நமக்குத் தெரிந்தவர்களைச் செல்லப் பெயரால் அழைக்கிறோம்.

ஆனால், சட்டசபையில் கூட அந்த மாதிரி செல்லப் பெயர் கொடுக்கும் வழக்கம் உண்டென்றால் நமக்கு ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? பிரிட்டிஷ் பார்லிமெண்டில் சில அங்கத்தினர்களுக்கு செல்லப் பெயர் உண்டாம். காப்டன் ஆர்தர் ஹோப் என்பவருக்கு "ஸ்டேஷன் மாஸ்டர்" என்று செல்லப் பெயராம். ஏனென்றால் வெஸ்மினிஸ்டர் வேலை நிறுத்தத்தின் போது அவர் வாலண்டியர் ஸ்டேஷன் மாஸ்டராய் வேலை பார்த்தாராம். ஆகாய மந்திரி ஸர் கிங்ஸ்லி வுட்டிற்கு 'அத்தைப் பாட்டி' என்று பெயராம். ஸர் பில்ட்ஸ் என்ற மற்றொரு அங்கத்தினரை, 'மிஸ்டர் பஞ்ச்' என்று கூப்பிடுவார்களாம். ஏனென்றால் வேடிக்கையாய் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு அவர் பேசுவது வழக்கம். ஸர் குக் என்பவரை 'பயர்மேன்' என்று கூப்பிடுவார்களாம்.

மார்லிஸ் என்ற ஆஜானுபாகுவான அங்கத்தினருக்கு 'சின்ன மனுஷர்' என்று பெயர்!

இப்படியெல்லாம் பார்லிமெண்டில் செல்லப் பெயர் இருக்கும்போது நமது சென்னை சட்டசபை அங்கத்தினர்களுக்கும் சில செல்லப் பெயர்கள் கொடுக்காமல் இருக்கலாமா?

'தாத்தா' என்று எந்த அங்கத்தினரைக் கூப்பிட வேண்டுமென்று தோன்றுகிறது. கனம் யாகுப் ஹாஸனைத்தானே! சரி, ஸர். பன்னீர் செல்வத்தை 'சடபுடாப் பொட்டி' யென்று சொல்லலாமா? தலைவர் உட்காரச் சொன்னால் உட்காராமல் ஏதாவது கல்லுளி மங்கத்தனம் செய்து கொண்டிருக்கும் சில அங்கத்தினர்களை

'கல்லுளி மங்கன்கள்' என்று சொல்வதில், நமக்கும் ஆனந்தம்; அவர்களுக்கும் சந்தோஷம். பிறகு ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு என்ன பெயர் கொடுக்சலாமென்று தோன்றுகிறது? எனக்கு ஒரு பெண் இருந்தால் நான் அவளை டி. டிக்கு கலியாணம் செய்து கொடுத்து விடுவேன். அவ்வளவு நைஸாக டிரஸ் பண்ணிக் கொண்டு 'டிப் டாப்பாக' ஊர்வலத்திற்குச் செல்லத் தயாரான மாப்பிள்ளை போல இருக்கிறார். ஆகையால் அவரை 'மாப்பிள்ளை' என்று கூப்பிடலாமா?

எப்போது பார்த்தாலும் கோபித்துக் கொள்ளும் அல்லது கோபித்தாற்போலத் தோன்றும் ஸ்ரீ ஜி. கிருஷ்ண ராவை 'துருவாசர்' என்று கூப்பிட்டால் அவர் நம்மைக் கோபித்துக் கொள்ள மாட்டாரே? ஸ்ரீமான் பாலத்தைப்போல வாக்குச் சாதுர்யத்தில் போட்டி போடக் கூடியவர் ஒருவரும் இல்லையானதால் அவருக்கு "அ அ... அசகாய சூ...சூ...சூரர்" என்று பெயர் கொடுக்கலாமா?

போகட்டும்; ஸ்ரீ. கத்தே ரங்கய்ய நாயுடுவைப் பார்த்தால் கெய்ஸர் மாதிரி பயமாயிருக்கிறது. பேச எழுந்தாலும் அப்புறம் உட்காரமாட்டார்; நடுவில் ஆடவும் பாடவும்கூட ஆரம்பித்து எல்லோரையும் சிரிக்கப்பண்ணி விடுகிறார். ஆகையால் அவரை 'கெய்ஸர்' என்று கூப்பிடலாமா, 'பபூன்' என்று கூப்பிடலாமா?

இன்னும் இந்தமாதிரி ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒவ்வொரு பெயர் இருந்தால் ரொம்ப சௌகர்யமாயிருக்கும். அங்கத்தினர் பேசும்போது 'கோதாவரியிலிருந்து வந்திருக்கும் கனம் பொருந்திய அங்கத்தினர் சொன்னார்' அல்லது 'நிலச்சுவான்தார் பிரதிநிதியான கனம் பொருந்திய அங்கத்தினர் உளறினார்' என்று ஒரு முழ நீளம் மற்றொரு அங்கத்தினரைப் பற்றிக் குறிப்பிடவேண்டாம். 'எஸ்பேட்டு ராஜா சொல்லிற்று' 'ஆஷாடபூதி சொன்னது சரி' 'அபசகுனம் சொல்வதை ஆக்ஷேபிக்கிறேன்' என்று சுருக்கமாகப் பேசித் தீர்த்துவிடலாம். அப்போது சட்டசபை நடவடிக்கைகளும் ரஸமாய் இருக்குமல்லவா?

---


**பரசுராம**

**சித்த ஔஷதாச்ரமம்**

திருவண்ணாமலை (N. A. Dt.)

சென்னை லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில் மெம்பரும் தஞ்சை முனிசிபல் கவுன்ஸில் மாஜி சேர்மனுமான ஸ்ரீ S. A. Srm. ராமனாதன் செட்டியார் 24-10-38 தேதியில் எழுதுகிறார்:-

"நீரிழிவைக் குணப்படுத்தும் முறையில் டாக்டர் எஸ். பரசுராமய்யரின் திறமையை மிக்க சந்தோஷத்துடன் பாராட்டுகிறேன்.

ஒன்றரை வருஷ காலமாக நான் நீரிழிவால் கஷ்டப்பட்டேன். அல்லோபதி டாக்டர்களிடம் எவ்வளவோ வைத்தியம் பார்த்தும் சொஸ்தமில்லாமல் போகவே, என்நண்பர் ஒருவர் டாக்டர் எஸ். பரசுராமய்யர் அவர்களைப் பற்றிக் கூறினார். சுமார் ஒன்றரை மாதம் அவர் மருந்தைச் சாப்பிட்டதில் வியாதி கொஞ்சம் கொஞ்சமாக சொஸ்தமாகி விட்டது. மருந்தை நிறுத்தி ஆறு மாதமாகிறது. பரிசீலனையில் வியாதி துளிக்கூட இல்லை என்று தெரிகிறது. நான் ஆரோக்கியத்துடன் இருக்கிறேன்.

டாக்டர் எஸ். பரசுராமய்யர் சிறந்த சித்த, ஆயுர்வேத டாக்டர். முக்கியமாக நீரிழிவை சொஸ்தம் செய்யும் நிபுணர் என்று தைரியமாகச் சிபார்சு செய்கிறேன்"

# குயவன்

(கோத்தமங்கலம் சுப்ரமணியம்)

[இடம். குயவன் வீடு. குயவன் மணைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து பானை வனைந்து கொண்டிருக்கிறான். அவன் மனைவி கமலா புகையிலையைக் கிள்ளிப்போடத் தயாராய் உட்கார்ந்திருக்கிறாள்.]

கமலா. என்ன, உங் கையிலேதான் வலுவிருக்குதுன்னு சும்மா வனெஞ்சுக் கிட்டே யிருந்தா.?

குயவன். ஏன் என்ன செய்யச் சொல்ரே?

கமலா. சோத்துக்கு?

குயவன். ஆத்தே பெரமாதம்! என்ன குட்டி ரோசிக்கிரே. இதுவே தொளிலா ஒன்னையும் என்னையையும் பண்ணிப் போட்டவன் இதெல்லாம் ரோசிச்சானா?

கமலா. அவரு மாதிரியா நீயும்?

குயவன்.—மாதிரி என்ன? அவனே தான் நான்.

கமலா. (கும்பிட்டு) அட எஞ் சாமி. யேன் எங்களை இப்பிடிப் பாடாப் படுத்துரே? சூளைக்குக்கூட மொரும் பில்லியே?

குயவன். அவருதானா படுத்தராரு? நீ படுத்தலியா? நீ தட்டுர பானையெ நீயே சூளையிலே போடலியா?

கமலா. அட நீ என்னமோ பெரிய சன்னாசி மகன் கணக்காகத்தான் பேசுவே. சுட்டாத்தானே சுண்ட்ரப்போ சத்தம் கேக்கும்!

குயவன். சுண்டுக்கு கிண்ணுங்கிர பானைதானே நல்ல பானை, இதைக் கேளு குட்டி. பானையிலே உருதி வரணும்னா சுடணும்; படைப்புலே பக்தி வரணும்னா பாடுபடணும்.

கமலா. ஏன் அப்படியாவது படைப் பானேன்?

குயவன். அது உன் கிட்ட கேக்கிர போது சொல்லு! இப்ப சுட்ட மண்ணு தானே குட்டி பச்சை மண்ணோடே ஒட்டாது? பச்சை மண்ணோடே சேர்ந்து பாளும் புளுதியாப் போரதைவிட கொரத்தி கைச் சட்டியாவாச்சும் போய் உலகத்துக்கு உவகாரம் பண்ணி மேம்மை பெறலாமே.

கமலா. சரிதான் நீ வேதாந்திதான். நப்பனுக்குக்கூட இம்புட்டுப் பத்தி கிடையாது! இருக்கட்டும், மச்சான், உனக்குத் தான் இம்புட்டு பக்தி வந்திருச்சே உன்னை ஏன் தெய்வஞ் சோதிக்குது? (வனைந்த சட்டியை மட்டைகொண்டு தட்டுகிறாள்)

குயவன். நீ என்ன செய்யுரே?

கமலா. மணியாம் பருக்கைக் கல்லில் லாமத் தட்ரேன்.

குயவன். இருந்திச்சினா என்ன?

கமலா. ஏது பக்தி முத்திப்போனா பொளைக்கிர பொளைப்புக்கூடவா மறந்து போகும்? எம்புட்டுச் சுட்டாலும் ஒரு கல்லு ஒட்டிக்கிட்டிருந்தா ஓட்டை விளுந்திராதா பானை?

குயவன். அதுதான் குட்டி, சூச்சியம். எப்புடி பக்தியிலே கலந்து பிசைஞ்ச மண்ணுட்டம் மனுசன் இருந்தாலும் கடு கூண்டு தன்னெனம்கிர நினைப்பு இருந்தா மன உறுதியிலே ஓட்டை விளுந்திரும் கிரதுக்காக கடவுள் தட்டிப் பாக்கிறாரு.

கமலா. (கோபத்துடன்) ஆமாமா தருமமா நடந்து வாந்தவுக ரொம்ப?

குயவன். ஏன் தரும புத்திரர்.

கமலா. வாந்தாரு. ஆமா?

குயவன். சீ. பெரியவுங்களைத் திட்டாதே. அவரு வாந்ததுலே என்ன குட்டி கொரைச்சல்? அவரைப் பகைச்ச துரியோதிரன் பேருகூட இன்னும் இருக்கே.

கமலா. அட, அவரு நிக்க நிளலில் லாமத் திண்டாடலியா?

குயவன். அதுவா? உன்னைப்போல உள்ளவுங்களுக்குப் புத்தி வாரதுக்காக நடந்தது. தருமத்தின் வாள்வு தன்னைச் சூது கவ்வும், தருமம் மறுபடி வெல்லும் கிரது உலகம் தெரிஞ்சுக்கரதுக்காக கடவுள் செஞ்ச வேலையது.

கமலா. அப்படியானா கல்லிலேயே ஊடே கிடந்த மண்ணு கல்லுக்கூட சேரவும் படாதோ?

குயவன். சேரலாம் நான் மண்ணு அது கல்லு ஆனு ரெண்டுபேரும் சேந்துக்குவம்னு சேரப்பிடாது. சேர்ந்தா நாங்கள் மண்ணு. இல்லே. நாங்கள் கல்லு. இது நிச்சியமா யிருக்கணும்.

கமலா. சரிதான் நீ உருட்டி வைச்ச மண்ணுதான். (சிரிக்கிருள்) பானைக்கு உசிரு இருக்கா?

குயவன். ஏன் இல்லே? சுண்டினு சத்தம் கேக்குது. பக்கத்துலே நின்னு பேசினு ஓம்னு வாங்கி விடுது. கடவுள் படைக்கிர ஒண்ணொன்னும் உசிரு உள்ளதுதான்.

கமலா. அய்யோ பாபம், அந்தக் கடவுள் ஒன்னெயும் பானையாப் படைச்சிருந்தா எனக்கு இந்தத் தொயரமில்லாம விருந்திருக்கும்.

குயவன். நிசந்தான். இருந்தாலும் பானையாப் படச்சு உங்கிட்ட கொடுத்திருந்தா கோவத்துலே கல்லுமேலே போட்டு வுடைச்சிடுவே. சேரர இடத்தையும் அனுசரிச்சுதான் பலன் கெடைக்கும். கொஞ்சம் கண்ணே மூடிக்கிட்டு அம்பாரத்தைப் பாரு. (அடுக்கிய பானை வரிசையைப் பார்க்கிருள் ஒவ்வொரு பானைக்குள்ளிருந்தும் சில உருவங்கள்.)

மாமியார். ஊறுகாய் வைக்க நல்ல பானை. நாட்டுப் பொண்ணுக்குத் தெரியாமல் சில்லரை வைக்கலாம்.

லோபி. பணம் புதைத்து வைக்கலாம். திருடன் என்ற பயமில்லை. எவன் கண்ணிலேயாவது அகப்பட்டாலும்அஸ்தி என்று நினைத்துக்கொண்டு கவனிக்காமல் பயந்து போய்விடுவான்.

தர்மாத்மா. கோடைக்கு இரண்டு பானைகள் இருந்தால் தண்ணீர்ப் பந்தல் வைக்கலாம்.

பொறி கோல்லன். பட்டரை வைத்துப் பகவானுக்கு அங்கி செய்யலாம்.

கொஞ்சம் அடி அகலாமாயிருந்தால் ஒரு குண்டுமணி ஒதுங்கினுலும் நல்லது.

கிராமணி. இரண்டு பானை சரக்குத் தீர்ந்தா போதுமே.

குடியானவன். சங்கராந்திக்குப் பொங்க விடலாம்.

குடியானப்பெண். புருசனுக்கு வயலுக்குக் கஞ்சி கொண்டுக்கிட்டுப் போக நல்ல கலயம்.

பிராமணன். ஔபாசனத்துக்கு இதைத்தான் சிலாக்யம்னு—

ஷ 2. அபரத்துக்கும்கூட இதைத்தான் சொல்லி யிருக்கா.

ஓச்சன். அவிசகத்துக்கு ஆகும்.

பாம்பாட்டி. ஆடு பாம்பே.

சித்தன். நந்தவனத்திலோராண்டி.

யோகி. மண் ஒண்ணு பானை பலவிதம்

கமலா. அய்யய்யோ போதுமே. மூளையைக் கலக்கிப்புட்டியே. ஒன் வேதாந்தத்தை ஓம்மட்டிலே வச்சுக்க.

குயவன். நல்ல வேளே. எம்மட்டிலே யாவது இருக்கட்டும்னியே.

கமலா. ஆமா. ஓரத்திலே புடிச்ச நெருப்பு ஒட்டுக்கும் பத்தீராமே இருக்கட்டும். ஒன்னெப் பாத்து பாத்துக் குப்பானும் ஆரம்பிச்சுட்டானும்.

குயவன். என்ன?

கமலா. 10 நாளாச் சன்னசம் வாங்கிரம்கிருனும். பட்டணத்துச் சாமியாட்டம் போனத் தேவிலேயின்னுனும். நேத்து புளுங்கரிசி வாங்கக் கொடுத்த கா ரூவாக்கி தலையை மொட்டை போட்டுக்கிட்டு வந்து நின்னுனும். அவ, அந்தக் குட்டி அவன் பொண்டாட்டி வந்து சொல்லிச் சொல்லி பிருமுத்தி புடிச்சாப்லே கண்ணுத் தண்ணியை கரகரன்னு வடிக்கிரு.

குயவன். பயப்பிடாதேன்னு சொல்லி 2 நாளேக்கு அப்பன் வீட்டுக்குப் போகச் சொல்லு. அவன் பயமுறுத்தருன். சன்னசம் வாங்கிக்க மாட்டான்.

கமலா. ஏன் மாட்டான்?

குய.கொலேக்கிர நாய் கடிக்காது.கோடை இடி மளேயைக் கொண்டாங் துராது.

கமலா. ஆமா. நீ மாத்திரந்தான் சத்திய சந்தன்னு சொல்லுவே. பின்னே எப்படித்தான் சன்னசியாரது?

பதிலில்லே.

கமலா. சொல்லு.

மவுனம்

கமலா. அய்யய்யோ என்ன மயக்கமா? சொல்லு.

பெரிய மவுனம்.

சுகாதாரம்

# பாட்டி கற்றுகொடுத்தபாடம்

(டாக்டர் டி. எஸ். ரமணி)

பாட்டி அசௌகரியமாக யிருக்கிறுள் என்ற சமாசாரம் கேட்டவுடன் ஊருக்குப் போனேன். சிறு வயதிலேயே படிப்பிற்காக டவுனுக்கு வந்த நான் கிராமத்திற்கு ஜாஸ்தி போனதில்லை. கோடை லீவுக்குப் பள்ளிக்கூடம் மூடியவுடன் போவதுதான். சென்ற ஏழு எட்டு வருஷமாக ஒரு நாள் கூடப் போகவில்லை. இப்போது நான் ஊருக்குப் போனவுடன் எனக்கு அந்த ஊரே புதிதாகத் தோன்றியது. என் தகப்பனுருடைய ஸ்நேகிதர்கள் ஒருவரையும் காணும். எல்லோரும் என் தகப்பனுருக்கு துணையாகவே மண்ணுலகை விட்டு விண்ணுலகு போய்விட்டார்கள். எனக்குத் தெரிந்தவர்கள் நான்கு ஐந்து பேர்வழிகள் தான். என்னுடைய பாட்டன் நாள் முதற்கொண்டு வீட்டில் வேலைசெய்து வந்த மொட்டையன், என்னைப் பார்க்க வேண்டுமென்று தெருக் கோடியிலேயே நின்றுகொண்டு நான் வரும் வழியை பார்த்துக் கொண்டிருந்தான். 65 வயது ஆகியும் இன்னும் வீட்டில் வேலை செய்து வந்த அவனுக்கு என்னைக் கண்டவுடன் வந்த சந்தோஷம், கோடை லீவுக்கு வரும்போது என் தகப்பனுர் முகத்தில் தோன்றும் சிரிப்பை ஞாபகப் படுத்தியது.

வீட்டு வாசலில் சாயந்திரம் 4 மணி வெய்யலில் உளுந்தில் கல்லில்லாமல் பொறுக்கிக்கொண்டிருந்தாள் என் பாட்டி. டாக்டருக்குப் படித்துவிட்டு முப்பத்தி ஏழு வயதிற்குள்ளேயே 'லாங்ஸைட்' என்று கண்ணுடி போட்டுக் கொண்டிருக்கும் எனக்கு சற்று லஜ்ஜையாகவே தோன்றியது. கண்ணுடியை எடுத்து அதன் கூட்டில் போட்டு விட்டு, கோட்டானுக்கு வயதும் பார்வையும் அதிகம் என்று சொல்லிப் பக்கத்தில் உட்கார்ந்தேன். வளர்த்து எடுத்த பாட்டியிடம் எனக்குச் சலுகை ஜாஸ்தி.

'இருக்கிற வரையில் கையும் காலும் கண் பார்வையும் சரியாகயிருக்க வேண்டாமா அப்பா?' என்று சொல்லிக் கொண்டு என் க்ஷேம சமாசாரங்களை விசாரித்துக் கொண்டு,பக்கத்திலிருக்கும் படியிலிருந்து சோளப் பொறியில் கொஞ்சம் கொடுத்தாள். 'எனக்கு ஜரிக்காது வேண்டாம்' என்றேன்.

சற்று மலர்ந்து விழித்து என்னை ஊன்றிப் பார்த்தாள் என் பாட்டி. 'கல்லைத் தின்று கல்லை ஜரித்துக் கொள்ளும் இந்த வயதில் இது என்ன பண்ணும்? இந்த வயதில் வேளா வேளையில்லாமல், கண்டதையும் கேட்டதையும் காசைக் கொடுத்து ஓட்டலில் தின்றுவிட்டு இப்படி உடம்பை கெடுத்துக் கொள்ளலாமா? புளியம்பழம் காய்ந்தால் கரைத்து உபயோகப்படுத்தலாம். புளியங் காயிலேயே காயவைத்து விட்டால் எதற்கு உதவும்? இப்படி சிறு வயதிலேயே குடலைக் குறுக்கிக் கொண்டு இதுதான் சாப்பிடுவது, இது சாப்பிடக் கூடாது என்று வைத்துக் கொள்ளலாமா? நாலு தினுசும் சாப்பிட வேண்டாமா? ஜாஸ்தியாக ஒன்றையும் சாப்பிட வேண்டாம். அந்தந்த காலத்தில் கிடைப்பதை சாப்பிட்டு ஜரிமானம் ஆகாவிட்டால் உடம்பு என்னத்துக்கு உதவும்? குடலும் தேகமும் எப்படி வலுப்படும்?' என்றுள்.

நான் டாக்டருக்குப் படித்து எவ்வளவு தெரிந்து கொண்டிருந்தாலும் ஆரோக்ய வாழ்வுக்கு ஆரம்பப் பாடம் அன்று தான் படித்தாற்போல் தோன்றியது. சாதாரண உண்மையானாலும் இடம் காலமும், சொல்லுகிறவர்கள் விதமும் அவர்களுடைய வாழ்வும், எப்படி மனதில் வேர் ஊன்ற பதியும்படி செய்கிறது என்பதை அன்றுதான் கண்டேன். தண்டவாளத்தில் போகும் ரயிலைப் போல ஒரே மாதிரி ஆகாரம், மணிப் பிரகாரம் சாப்பிடுவதை

விட, காலம், சௌகரியம் இதற்குத் தகுந்தாற்போல் ஆகாரத்தை மாற்றிச் சாப்பிடுவது நலம். குடலுக்கு வலுவும் ஜீரண சக்தியும் அதிகரிக்கிறது. வாதாம் அல்வாவைவிட சோளப் பொறியில் ஜாஸ்தி பிரோடீனும் (Protein), வைடமினும் (Vitamin) இருக்கிறது என்று சொன்னல் நாளை தினமே நீங்களும் சோளப் பொறியையே சாப்பிட ஆரம்பித்து விடுவீர்கள். இதுவும் தண்டவாளத்தில் போகும் ரயிலைப்போல ஒரே விதியாகி விடும். அடுத்தாற்போல் வேறு ஏதாவது கொடுத்தால் ஜரிக்காது என்று சொல்ல வேண்டும்.

ஆனல் என் பாட்டி அப்படி ஒன்றும் சொல்லவில்லை. பொது விதியை மாத்திரம் தான் சொன்னுள். பிறகு அவரவர்கள் ஊகத்திற்கும் மனப்போக்கிற்கும் தகுந்தாற்போல் அதே வழியில் விருத்தி செய்து கொள்ளலாம். நமது நூல்களும் இதேமாதிரி பொது விதியைத்தான் சுட்டிக் காட்டுகின்றன. இதிலிருந்து ஏற்படும் அவரவர்கள் அனுபவத்தை பண்டைய காலத்து ரிஷிகள் நமக்கு பல வழிகளாகக் காட்டியிருக்கின்றனர். இதனல் தான் நம் நாகரீகமும் நாலா பக்கமும் விழுதுவிட்டுத் தழைத் தோங்கிய ஆலமரம்போல் அசையாமலிருக்கிறது. மறுபடியும் துளுக்கக்கூடிய சக்தி ஆல விருக்ஷத்திற்கு உண்டு. தற்கால நாகரீகத்தின் வாய்ப்பட்டு மறந்துபோன நமக்கு சுகாதாரத்துறையிலும் மீண்டும் வழி காட்டுகிறுர் நம் மகாத்மா. காந்தி யடிகள் 'நாக்கின் ருசிப்போக்கின்படி போய்க் கொண்டேயிருக்க வேண்டாம். மிதமாகச் சாப்பிடுவதே போதும்' என்கிறுர். இது ஒரு புராதன உண்மை. மற்றொரு உண்மையைப் பாட்டி கற்றுகொடுத்தாள். நாலு தினுஸும் (Variety) சாப்பிடுவது ஜீர்ண சக்திக்கும் குடலுக்கும் வலுவுக் கொடுக்கும் என்பதை பாட்டியின் வார்த்தையைக் கேட்டவுடன் இது எல்லாம் ஒரு ஸினிமாப் படம்போல் என் மனதின் கண் தோன்றியது. நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

---


உத்தரவாதமான
மரச்சாமான்களுக்கு

**கஸின் & கோ.**

17-18, பிராட்வே,
சென்னை.

போன்: 2221

புராணப்பட உலகின் ஜோதி *

பட ரஸிகர்களின் உள்ளத்தைக்
கொள்ளைகொண்டு வரும் உயர்தர
தமிழ் பேசும் புராணப் படம்

# யயாதி

31-12-38 முதல் மகிழ்ச்சியான 3-வது வாரமாக

## சென்னை கெயிட்டியில்

நடைபெற்று வருகிறது.

ஆயிரக்கணக்கான மக்கள் தினந்தோறும் பார்த்துப்
பரவசமடைந்து வருகின்றனர்.

கீழ்க்கண்ட ஊர்களில் கூடிய சீக்கிரம்
ஆரம்ப தினத்தை ஆவலுடன் எதிர்பாருங்கள் :—

பெங்களூர்: லக்ஷ்மி டாக்கீஸ்
கோயமுத்தூர்: ராஜா தியேட்டர்ஸ்
வேலூர்: ராக்ஸி & டாஜ் மஹால் டாக்கீஸ்
காரைக்குடி: ராம விலாஸ் சினிமா
சிதம்பரம்: ஸ்ரீநடராஜா டாக்கீஸ்

ஆரணி: லக்ஷ்மி டாக்கீஸ்
காஞ்சீவரம்: கந்தன் டாக்கீஸ்
திருப்பாபுலியூர்: ஸ்ரீதரன் டாக்கீஸ்
திண்டிவனம்: கிருஷ்ணபிக்சர்பாலஸ்
அருப்புகோட்டை: ராஜா தியேடர்ஸ்
தூத்துகுடி: காரனேஷன் டாக்கீஸ்

| டைரெக்ஷன் : | பாட்டு : | வசனம் : |
|---|---|---|
| M. L. டாண்டன் | பாபநாசம் சிவன் | செருகளத்தூர் சாமா |

'யயாதி' 'சந்திரமோஹனா' படங்களின் முக்கிய பாடல்களை ஹட்சின்ஸ் ரிகார்டுகளில் கேட்டு மகிழுங்கள்.

விபரங்களுக்கு :


**மோஹன் மூவிடோன் கம்பெனி**
(தந்தி : Movietone)
1, மஞ்சணக்கார தெரு, மதுரை.

விமர்சனம் :

# வாலிபர் சங்கம்

வே. சு. ரா.

சென்னைக்குக் கிருஸ்துமஸ் விடுமுறைக்கு வந்திருப்பவர்களுக்கும் சென்னை வாசிகளான நண்பர்களுக்கும் ஓர் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். தயவுசெய்து வெல்லிங்டன் டாக்கீஸுக்குப் போகாதீர்கள். "வாலிபர் சங்கம்" என்ற படத்தை தப்பித்தவறிப் பார்த்துத் தொலைத்து விடாதீர்கள். அதைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்து உங்கள் பிராணன் போய்விட்டால் அதற்கப்புறம் ஒருவரையும் குற்றம் சொல்லக்கூடாது.



"வாலிபர் சங்கம்" அவ்வளவு வேடிக்கையான படம். கதையும் நடிப்பும் வேடிக்கையாக இருக்கிறது, வாஸ்தவம்தான். ஆனால் கதையில் பொதிந்திருக்கும் கிண்டலையும் தான் நீதிகளையும் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். வாலிபர் சங்கம் தற்கால நாகரீகப் புரட்சியைக் குறிக்கிறது. பழைய வழக்கங்களை உதறித் தள்ளுவது அந்த சங்கத்தின் நோக்கம். ஆனால் ஆயிரக் கணக்கான வருஷங்களாக முன்னோர்கள் ஆலோசித்து அமைத்த சமூக முறையை ஒழித்துவிடுவது இலேசானதல்ல என்பதை சுட்டிக்காண்பிக்கிறது சுந்தரம் ஏற்படுத்திய வாலிபர் சங்கத்தின் தோல்வி. வாலிபர் சங்கம் தற்கால நாகரீகத்தின் ஓர் கூக்குரல். அது ஒரு புசல்; சிறிது நாழிகை புழுதியை வீசி அடித்து அயர்ந்து போயிற்று. பழைய சமூக முறை என்ற ஆலமரத்தை அசைக்க முடியவில்லை.

சமூக முறை பகுத்தறிவை ஒட்டி ஸ்தாபிக்கப்பட்டது. காதல், ஆசை, முதலிய வெறும் வார்த்தைகளால் மட்டும் நிச்சயிக்கப்படவில்லை. நாகரீகத்தின் பேரால் ஏதோ சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு பழையனவற்றைக் கிண்டி 'குரங்குத்

தனம்' செய்யக்கூடாது, அது மனிதவர்க்கத்துக்குக் கெடுதல், பகுத்தறிவை உபயோகித்து ஆராய்ந்தால் முதலில் இருந்ததே சரி என்ற முடிவுக்கு வருவோம் என்பதை இளம் சந்ததியைச் சேர்ந்த ருக்மணி பறை சாற்றுகிறாள்.

வாஸ்தவம்; ருக்மணி இந்தத் தலைமுறையைக் காட்டிலும் வரப்போகும் தலைமுறை புத்திசாலித்தனமாய் இருக்கப் போகிறது என்ற ஆறுதலை அளிக்கிறாள். அதை நடேசய்யரும் ராமாநுஜமும் ஒப்புக்கொள்கிறார்கள். ருக்மணியால் அவர்களுக்கு ஆறுதல்; சந்தோஷம் எல்லாம் 'நாகரீகத்தின்' வலையில் விழுந்து நாசமாய்ப்போன நமக்கு பகுத்தறிவைக் கொண்டவரும் போகும் தலைமுறையால் க்ஷேமம் உண்டாகப்போகிறதா? ரொம்ப சந்தோஷம்.

"வாலிபர் சங்கம்" மற்றொரு செய்தியை நமக்குத் தெரிவிக்கிறது. அஹிம்சையின் மேன்மையை நடேசய்யர் மூலம் அறிகிறோம். வேலை நிறுத்தக்காரர்கள் குடித்துவிட்டு கல்மாரி பொழிகிறார்கள். நடேசய்யர் உயிருக்கஞ்சாமல் ஹிதோபதேசம் செய்ய முன் வருகிறார். கல்லடி கிடைத்தால்கூட மண்டை உடைத்தால் கூடப் பரவாயில்லை, வயிற்றுக்காக ஆத்மாவை விற்கப் பார்த்த மனிதர்கள் ஹிருதயத்தில் சுடரைத் தட்டி ஜோதி எழுப்பியாயிற்று. பிறகு என்ன வேண்டும்?

இத்தகைய அபாரமான கொள்கைகளை மிகவும் ரஸமான வழியில் எடுத்துச் சொல்லி நம்மைச் சிரிக்க வைக்கிறது இந்தப் படம். கோபாலையும், ராமானுஜத்தின் மனைவியையும் பார்த்துவிட்டு நம் நாகரீகத்தையும் பார்த்து வயிறு குலுங்கச் சிரிக்கிறோம். ருக்மணியின் மிருகங்கள் மகாநாட்டைப் பார்த்துவிட்டு நம்முடைய மகாநாடுகளையும் பார்த்துத் திகைக்கிறோம். சுந்தரத்தையும் கமலாவையும் பார்த்ததும் நம்மைப் பற்றியே கொஞ்சம் சர்ச்சை செய்துகொள்வது அவசியமாகிறது.

இந்தக் கிண்டல் படத்தைக் கிண்டிக் குளறுபடி செய்து விடாமல் ஒவ்வொரு நடிகரும் நன்றாக நடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. எல்லோரும் தாங்கள் பேசுவதை உணர்ந்துதான் பேசுகிறார்கள். ஆகையால்தான் நம்மெல்லோரையும் விட முன்னாடியே சிரிக்கவோ, அழவோ செய்து விடுகிறார்கள். இந்தப் படத்தில் நடிப்புக்குக் பிரைஸ் கொடுப்பதானால் முதல் பரிசை மாதிரிமங்கலம் நடேசய்யர் 'லபக்'கென்று பிடுங்கிக்கொண்டே போய் விடுவார். சம்பந்தி ராமானுஜம் எவ்வளவு சண்டைக்கு வந்தால்கூட அவருக்குச் கிடைக்காது. என்ன இருந்தாலும் ராமானுஜம் பெண்ணைப் பெற்றவர்தானே! இரண்டாவது பரிசைத் தயவுசெய்து ருக்மணிக்குக் கொடுத்து விடுங்கள். இல்லாவிட்டால் சுந்தரத்தின் மானத்தை வாங்கியது போல் நம்மையும் திணற அடித்து விடுவாள். மூன்றாவது பரிசை சுந்தரத்திலிருந்து ருக்மணியின் நாய்க்குட்டி வரையாருக்கு வேண்டுமென்றாலும் கொடுக்கலாம்.

இந்தப் படத்தில் குறைகள் என்று சொல்லக் கூடியவை முக்கியமாக மூன்று. ஒன்று, படம் மூன்றுமணி நேரம் இருக்கிறது. அனாவசியமான சில காட்சிகளை நீக்கிக் குறைத்துவிட வேண்டும். இரண்டாவது, கோகிலம் என்ற அஸமஞ்சத்தைக் கதையிலிருந்து நீக்கியிருக்கலாம். அவள் கல்யாணம் பண்ணிக் கொள்ளாதிருந்ததில் ஆச்சரியமில்லை. இந்தப் பெண்ணை பார்த்தால் யார்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வார்கள்? இது தெரிந்தே கோகிலம்...அல்ல, அல்ல, கோகிலத்திற்கு எங்கே அவ்வளவு தூரம் மூளை வேலை செய்யப் போகிறது? 'ஆண் பிள்ளைகளுக்கு மூளையே இல்லை' என்று திருப்பிச் சொல்லி கோகிலம் நம்மைக் கோபித்துக் கொண்டபோதிலும் கோகிலம் கதைக்கு அனாவசியம் என்று சொல்லியாக வேண்டும்!

கடைசியாக, சகுந்தலா, ஒரு அநாவசியமான ஜன்மம். சகுந்தலா தற்காலப் பெண்மையின் ஒரு அம்சத்தைக் கிண்டல் செய்வதென்னமோ வாஸ்தவம்தான். அந்தக் கிண்டல் விரஸமானது; அது வேண்டாம். இப்படத்தின் அருவருப்புத் தரக் கூடிய பல கண்ணியமற்ற சம்பாஷணைகள் இவளிடமிருந்துதான் பிறக்கின்றன.

ஆம்; இதுமாதிரி கதா பாத்திரங்களுக்கு மற்றத் தமிழ் படங்களில் இடமிருக்கிறது. ஆனால் 'வாலிபர் சங்கத்தில்' இடமிருக்கக் கூடாது. அதுவும் ஸ்ரீ. கல்யாண சுந்தரத்தின் சிருஷ்டியில்.




## மத்திய சர்க்கார் மாகாணமல்ல

வைஸ்ராய் நம்புவதுபோல எல்லாம் நடக்கும் என்று நான் சொல்ல முடியாது. மாகாண சுயஆட்சி நடைபெறுவதைப்பற்றி வைஸ்ராய் சொல்வதைப் பூராவும் நான் ஒத்துக் கொள்கிறேன். (ஆனால் அதே போல மத்திய சர்க்காரும் சமஷ்டியின் கீழ் நடைபெறும் என்று சொல்லுவது சரியல்ல) கீழ் சபையைப் போலவே நிதி நிர்வாகத்தில் உரிமைகொண்ட மேல் சபை மாகாணத்தில் இருக்கிறதா? நேர் முகமில்லாத தேர்தல் முறையிலா மாகாண சட்ட சபைகள் கூடின? மாகாண சபைகளில் சமஸ்தான அரசர் அனுப்பின அங்கத்தினர்கள் கிடையாது. மாகாண நிர்வாகத்தில் ஒதுக்கப்பட்ட (சட்ட சபை விவாதத்திற்கு வரக் கூடாதென்று) விஷயங்கள் கிடையாது. மாகாண வருமானத்தில் 80 சத விகிதம் ஒதுக்கப்பட்ட விஷயங்களுக்கு ஈடுவைக்கப் படவில்லையே. ரயில்வேக்கள், நாணய விகிதம் மாற்று போன்ற மூலாதாரமான விஷயங்கள் ஒன்றும் அன்னிய நிர்வாகத்திற்கு விடப்படவில்லை. (சமஷ்டி ரயில்வே நிர்வாகம், ரிசர்வு பாங்க் போன்றன) மாகாணத்தின் நிதி நிம்மதி விஷயமாக கவர்னருக்கு விசேஷ அதிகாரம் என்ன இருக்கிறது? சமஷ்டி வர்த்தக மந்திரியின் கையை விலங்கிடும் வியாபாரச் சலுகைகள் ஒன்றும் மாகாணத்தில் கிடையாது.

சமஷ்டியின் கீழ் இருக்கும் பாதுகாப்பு ஏற்பாடு போன்ற மானத்தைக் குலைக்கும் அம்சம் ஒன்றும் மாகாணத்தில் கிடையாது. இந்தக்கோரமான அம்சங்கள் எல்லாம் சமஷ்டி அரசியலில் இருக்கின்றன.

வைஸ்ராய் சொன்னது போன்ற மனமாற்றத்திற்கு அறிகுறியாக சர்க்கார் செய்கையிலாவது ஏதாவது தென்படுகிறதா? அதுவும் காணோம். வருமானவரி மசோதா விஷயமாக சர்க்காரின் ஹிருதயமற்ற கொள்கையும், ரூபாய் விகிதத்தைப்பற்றிய வர்தாத் தீர்மானத்திற்கு சர்க்கார் அளித்த மரியாதையும், சமீபத்தில் நிர்வாக சபையில் செய்த நியமனமும், இந்திய நன்மதிப்பையும் ஒத்துழைப்பையும்பெற வேண்டுமென்று சர்க்கார் கவலைப் படுவதாகவே காட்டவில்லை. வைஸ்ராய் என்ன சொல்லி என்ன?

சமஷ்டியில் நம்பிக்கை யில்லாதவர்களையும் கூட வைஸ்ராய் ஒத்துழைக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறார். சமஸ்டி திட்டத்தை வகுத்தவர்களை நம்பச் சொல்லுகிறார்; அதை நடத்தப் போகும் பொறுப்புப் பெற்றவர்களையும் நம்பச் சொல்லுகிறார். நான் பதிலாக இங்கிலீஷ் பழமொழியைச் சொல்லுகிறேன். ''நீங்கள் நம்பினால் நாங்களும் நம்புவோம்.''

வைசிராய் மகாத்மா காந்தியை நம்பட்டும். தங்கள் பிரஜைகளை நம்பும்படியாக வைஸ்ராய் சமஸ்தானாதிபதிகளை தூண்டட்டும். நான் மேற்சொன்ன கோர அம்சங்களை வைஸ்ராய் நிவர்த்திக்கட்டும். சட்டத்தை மாற்றாமலேயே இதை யெல்லாம் செய்யலாம். இங்கிலாந்து இந்தியாவை நம்பக் கற்றுக்கொள்ள வேண்டும். தன்னைத்தானே நிர்வகித்துக் கொள்வதில் மட்டுமல்ல, தன் எதிர்கால திட்டத்தைத் தீர்மானித்துக் கொள்வதிலும்கூட அந்த நம்பிக்கையின்றி ஒரு காரியமும் நடக்காது. வைஸ்ராயின் வார்த்தைகள் வீண் தான். காங்கிரஸ் தனது சுதந்திரப் போரை மட்டும் நிறுத்தாது. ஒரு மகத்தான நாடு தான் விடுதலை அடைவது என்ற தீர்மானத்திற்கு வந்து விட்டால் யாரால் அதைத் தடுக்க முடியும்? பூலோகத்தில் எந்த சக்தியாலும் அதை வழி மறிக்க முடியாது. இங்கிலாந்தினால் கூட முடியாது.

—ஸ்ரீ சத்தியமூர்த்தி.

## பர்மா பிரிவினை ஏன்?

பலுஜிஸ்தானிலிருந்து இந்தியாவின் வடக்கு எல்லை ஓரமாக ஒரு நீண்ட மலைத் தொடர்ச்சி பஞ்சாப் வழியாக தென்கிழக்கேயும் கிழக்கேயும் போகிறது. பூத்தல சாஸ்திரத்தின்படி இந்தத் தொடர்ச்சியின் ஓரங்களில் எண்ணெய்ச் சுரங்கங்கள் ஏராளமாக இருக்கின்றன என்று கண்டிருக்கிறார்கள். அா

கான் மலைகள் பக்கத்தில் அந்தச் சுரங்கம் ரொம்ப அதிகம். இந்த மலைத் தொடர்ச்சியின் ஓட்டம் மேற்கே காகஸஸ் வரையிலும் கிழக்கே பர்மா சுமாத்ரா வரையிலும் இருக்கிறது. சமீபத்தில் சுமாத்ராவில் கண்டு பிடிக்கப்பட்ட எண்ணெய்ச் சுரங்கங்களிலிருந்து உலகத்தில் எண்ணெய்ச் சுரங்கங்கள் பாகங்கள்இருக்கும் இடங்களெல்லாம் ஒரு அமைப்பிலிருக்கின்றன என்ற கொள்கை ஊர்ஜிதமாகிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் நான் நிர்வாகம் வகித்தால் நேபாளத்தையும் காஷ்மீரத்தையும் விடவே மாட்டேன். அங்கே எண்ணெய்ச் சுரங்கங்கள் சமிருத்தியாக இருக்கின்றன. எண்ணெய் தானே சக்தி?

பூமி சாஸ்திரப்படி இயற்கைச் சக்திகள் பர்மாவை இந்தியாவுடன் பிணைத்திருக்கின்றன. இன்னும் பிணைத்துக் கொண்டே இருக்கின்றன. ஆனல் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சக்தி பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்து விட்டது.

—டாக்டர் ஸாஹ்னி.

## தொழில்கள்—சக்திகள் பிணைப்பு

நாம் யந்திர யுகத்திலிருக்கிறோம். முன்னேற்றம் நாலுகால் பாய்ச்சலில் போகிறது. ஒரு நாட்டின் பொருளாதார நிலைமைக்கு மூலாதாரமாக இருப்பது இப்பொழுது உற்பத்தி சாதன சக்திதான். அந்தச் சக்திக்கு நாட்டில் பல மூலியங்கள் இருந்தால் அவைகளை ஒட்டி ஒரு பொருத்தமான அபிவிருத்தி திட்டத்தை வகுப்பது அவசியம்.

உலகத்தின் பொருளாதார அமைப்பிலேயே இப்பொழுது பலத்த மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகையால் இந்தச் சமயம் தொழில் அபிவிருத்தித் திட்டத்தை செவ்வனே வகுப்பது அத்தியாவசியமாகிறது. பல நாடுகளில் ஐந்து வருஷ, பத்து வருஷ திட்டங்கள் போடப்படுவதைப் பற்றிக் கேள்விப்படுகிறோம்.

ஒரு அம்சத்திற்கு மட்டும் திட்டம் போடுவது உபயோகமில்லை. உற்பத்தி மூலங்களின் பல பகுதிகளையும் பொருத்திச் சேர்த்து (குறித்த பிரதேசத்திற்குள்) ஆராய்ச்சி செய்ய வேண்டும். தொழில், போக்குவரத்து, நிதி, வியாபார ஸ்தலம், விலைவாரி ஏற்பாடு—இவற்றுடன் பொருத்தித்தான் பெருத்த உற்பத்திச் சாதன சக்திகளை உபயோகிக்கும் திட்டங்களை வகுக்க வேண்டும்.

இந்த மாதிரி 'பரஸ்பரப் பொருத்த ஏற்பாடு' இல்லாததால் தான் அநேக பெரிய திட்டங்கள் வீணுகின்றன. பெரிய மின்சாரத் திட்டங்கள் போட்டு வேலை செய்து முடிக்கிருர்கள்; உண்டாகும் மின்சார சக்தியை வினியோகிக்க வழி செய்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன; பெரிய தொழிற்சாலைகளை தடபுடலாக அமைக்கிருர்கள். உற்பத்தி ஆரம்பமானவுடன் போக்கு வரத்து வசதி இல்லாமல் ஏராளமான உற்பத்தியைச் சமாளிக்க முடியாமல் திணறுகிருர்கள்.

இந்தியா பூராவையும் பொருளாதார ஒற்றுமை கொண்ட ஒரே பிரதேசமாகக்கொள்ளலாம். அதற்குள் பல சிறு பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் உற்பத்தி மூலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றில் பல இன்னும் ஆராய்ச்சிக்கே வரவில்லை. ஆனல் இந்த இயற்கை வசதிகள் நாடு முழுதும் ஒரே தினுசாக இல்லை. சில இடங்களில் நதிகள் மிகுந்து இருக்கின்றன; சில இடங்களில் நீர் வீழ்ச்சி சக்தி ஜாஸ்தியாக இருக்கிறது; சில இடங்களில் நிலக்கரி; சில இடங்களில் காடுகள், மலைகள். இந்திய மாகாணங்களின் எல்லைகள் இயற்கைப் பிரிவால் ஏற்பட்டவையல்ல; பாஷை வேற்றுமையாலும் அரசியலாலும் ஏற்பட்டவை,

இன்று பல மாகாணங்களில் நீர்வீழ்ச்சி மின்சார சக்தி வசதிகள் இருக்கின்றன. ஆனல் அவற்றை அபிவிருத்தி செய்யத் தேவையான பணமோ இதர சௌகரியமோ இல்லை. டில்லிக்கு வங்காளத்திலிருந்து நிலக்கரி வருகிறது. ஆனல் சிக்கனமாகச் செய்தால் பஞ்சாபிலிருந்து நீர்வீழ்ச்சி மின்சார சக்தியைக் கொண்டு வரலாம். தென்னிந்தியாவில் அப்படிப்பட்ட மின்சார சக்தி வசதி இருந்தும் விறகும் கரியும் இறக்குமதி செய்கிருர்கள்.

இந்தியாவில் தொழில் உற்பத்தி மூலங்களைத் திரட்டிப் பொருத்தித் திட்டங்கள் வகுப்பதற்காக ஒரு சமஷ்டி அபிவிருத்தி போர்டு இருப்பது அவசியம். அது நிர்வாகம் நடத்தும் தலைமை அங்கமாக இருக்கும். மாகாணங்களில் அதன் கீழ் கிளைச் சங்கங்கள் பின்வருமாறு இருக்கலாம்:—(1) நிதி (2) போக்குவரத்து (3) சுரங்கங்களும் எண்ணெய்களும் காடுகளும் (4) மின்சார சக்தி (5) தொழில் நிதியின் கீழ் (a) காப்பு வரி, (b) நாணய மாற்று (c) பாங்கிங் என்றும் போக்கு வரத்தின் கீழ் (a) ரயில் (b) ரோடு (c) கப்பல் (d) ஆகாயவிமானம் என்றும் உதாரணமாகப் பிரிவுகள் இருக்கலாம்.

ஐந்து கிளை சங்க டைரக்டர்களும் நாலு இதரர்களுமாக போர்டில் ஒன்பது அங்கத்தினர்களும் ஒரு தலைவரும் இருக்க வேண்டும்.

வேலை ஆரம்பிக்குமுன் ஒவ்வொரு டைரக்டரும் தன் கிளையின் அபிவிருத்திக்கு ஒரு வேலைத் திட்டத்தைக் குறித்து வருஷங்களுக்

குத் தயாரிக்க வேண்டும். ஐந்து திட்டங்களை யும் ஒத்துப்பார்த்து கடைசியாக ஒரு பொதுத் திட்டம் வகுக்க வேண்டும். அதைச் சர்க்காருக் குச் சமர்ப்பித்து சம்மதம் பெற வேண்டும். ஸோவியத் ஏற்பாடு அநேகமாக இந்த மாதிரி தான்; ஆனால் இதில் வேலை அடியிலிருந்து ஆரம்பமாகிறது. அதாவது மாகாணங்களி லிருந்து உதிக்கிறது. ஸோவியத்தில் மத்திய ஸ்தாபனத்திலிருந்து தான் ஆரம்பமாகும்.

இப்பொழுது இந்தியாவில் ஒரு அகில இந் தியத் தொழில் அபிவிருத்தித் திட்டம் வகுக்க ஏற்பாடு நடக்கிறது. ஆனால் எல்லாத்தொழில் களையும் ஒன்று கூட்டி ஒத்துத் திட்டம் போட வேண்டும். —மேஜர் ஹாவர்டு.

## ஸ்தல ஸ்தாபனங்கள்

ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களால் மிகவும் ஸ்வாரஸ்யமான பலன்கள் ஏற்பட்டிருக்கின் றன. கிராமப் பஞ்சாயத்தில் குரோத புத்தி நிரம்பி யிருக்கிறது. கால்வாசிப் பஞ்சாயத்து போர்டுகள், கட்சிப் பிரதி கட்சிச் சண்டைக ளால் ஒழிக்கப்பட்டு விட்டன. ஸ்பெஷல் ஆபீ ஸர் புதிய போர்டுக்குத் தலைமை வகிக்க நிய மிக்கப் படுகிறார். இவர் அந்த இரண்டு கட்சிகளுக்கு மத்தியிலும் அகப்பட்டுக் கொண்டு அவஸ்தைப் படுகிறார். பஞ்சாயத் துத் தேர்தல்களின்போது சண்டையும் காலித்தனமும் வெகு சகஜமாகி விட்டன. அநேக சந்தர்ப்பங்களில் கிராமத்தார் தங்க ளுக்குள் பணம் வசூலித்து இந்த சண்டைக ளால் விளைந்த ஸிவில் கிரிமினல் வியாஜ்யங் களை நடத்துகிறார்கள்.

இந்தக் கலவரங்களால் கொலைகள்கூட நிகழ்வதுண்டு. சமீபத்தில், கொலைக் குற்றத் திற்கு உள்ளாகியிருந்த ஒரு சிறுபான்மைக் கட்சி தங்களுக்கு வோட்டுப் போடாவிட்டால் கொன்று போடுவதாக கிராமத்தாரைப் பய முறுத்திற்று. ஆனால் பெரும்பான்மைக் கட்சி ஒரு படி முன்னே போய் வோட்டர்களைப் பயமுறுத்துவதற்காக சிறுபான்மைக் கட்சித் தலைவரை அடித்து உதைத்தது. இப்படியாக, ஒவ்வொரு கட்சியும் பலாத்காரத்தாலும் பய முறுத்தலாலும் வோட்டைக் கேட்கின்றன.

ஜனநாயகத்தின் பேரிலும் வோட் போடும் முறையிலும் நமது பயத்தைக் காண்பிப்பதை விட்டொழித்து இந்தக்கெடுதல்களைப்போக்க வழி தேடவேண்டும். எந்த ஸ்தாபனத்திலும் உள்ள கெடுதல்களை உடனுக்குடன் போக்கி திருத்தி யமைக்க வேண்டும். காலம் செல்ல செல்ல தானாகவே சரியான புத்தியையும், கௌரவ நோக்கத்தையும், நமது கடமையை யும் உரிமையையும் அறியும் திறமையையும் அடைவோம்.

—பட்டாபி சீத்தாராமையா,

## கூட்டுப் பண்ணை

தற்சமயம் சில சிரமங்கள் இருந்த போதி லும், விவசாயிகளின் சமயத்திற்குப் பணம் கிடைப்பது சிரமமாகி விட்ட போதிலும், கடன் நிவாரண சட்டத்தால் ஒரு அனுகூலம் இருக்கிறது. அதன் பலனாக கூட்டுறவு இயக் கம் நன்றாக விருத்தியாகலாம்.

இப்பொழுதே இந்தப் பிராந்தியத்தில்(திரு வண்ணாமலை டிவிஷன்) குடியானவர்களு டைய நிலங்களில் ஒரு பெரும் பகுதி கூட் டுறவு சங்கங்களின் கையில் இருப்பதாக் அறி கிறேன்—அதாவது கடன் தொகைக்காக எடுத்துக்கொண்டவைகள். இந்த மாதிரி குடி யானவர்கள் நிலத்தை சாகுபடி செய்யாத ஸ்தாபனங்கள் கைப்பற்றிக் கொள்வது நல்ல தல்ல. ஆனால் விவசாயிகள் கடனைத் திருப்பி கொடுக்க முடியவில்லை என்பதிலிருந்தே நிலத்தின் விளைச்சல் தேவைக்குப் போத வில்லை யென்பது தெரிகிறது. இந்த சங்க டத்தை எப்படித் தீர்ப்பது? கட்சி உபத்திர வம் இல்லாத கிராமங்களில், பொதுவாகப் பிர யத்தினங்கள் செய்து உழைத்தால் பொது வாக நன்மை பெறலாம் என்ற உணர்ச்சி ஏற் பட்டால், கூட்டுப் பண்ணை முறையை ஏற் படுத்த முயற்சி செய்யலாம்.

சில்லறைக் கைப்பற்றுகளை யெல்லாம் ஒன்று சேர்த்து மகசூலைப் பிரித்துக் கொள்ள லாம். இந்தக் கூட்டுப் பண்ணை முறையில் சொந்த சொத்திற்கு ஒன்றும் ஆபத்தில்லை. ஒரு பிரதேசத்தைச் சாகுபடி செய்வதில் பலர் கூடி முயன்றால், விதைகள், உரங்கள், இயந்திரங்கள், மாடுகள் முதலிய தேவையான விவசாய சாதனங்களைச் சிக்கனமாகவும் சுலப மாகவும் பெறலாம்.

* * *

விவசாயிகளுக்கு விவசாயத்திலிருந்து வரும் வரும்படி போதாது. ஏதாவது மேல் வரும்படி வரவேண்டும். அதற்காக தற்கால சர்க்கார் கதர் உற்பத்தியே வழியென்று கருதுகிறார்கள். விவசாயிகளுக்கு ஒரு சிறு கைத்தொழிலாக அமைவதற்கு அது மிகவும் ஏற்றதுதான். உற்பத்தியை எப்படி வினியோ கம் செய்கிறதென்ற கவலை வேண்டியதில்லை. இப்பொழுது குடியானவனுக்கு அதற்காக சர்க்கார் உதவிபெற்ற ஸ்தாபனமே இருக் கிறது.

—ஸ்ரீ டி. டி, கிருஷ்ணமாச்சாரியார்.